பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 29, வியாழக்கிழமை 14.09.2017 கதிர் 312

## வித்தியா கொலை வழக்கு தீர்ப்பு 27ஆம் திகதியன்று!

யாழ்ப்பாணம்,செப்.14
புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதன் படுகொலை வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 27 ஆம் திகதி வழங்கப்படும் என நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

இந்த வழக்கின் இரு தரப்பு சாட்சியங்களும் முடிவுற்ற நிலையில் இரண்டு தரப்பு சட்டத்தரணிகளினதும் தொகுப்புரைகள் நேற்றும், நேற்றுமுன்தினமும் நடைபெற்றன.

பக்கம் 18 »

## பிரி.தூதுவர் - சம்பந்தன் பேச்சு



கொழும்பு, செப்.14
இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஜேம்ஸ் டௌரீஸை நேற்று கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனும் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரனும் அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினர். அப்போது எடுக்கப்பட்ட படம். (உ)

# விரும்பியோர் விலகலாம் ஜனாதிபதி ஆணித்தரம்

## சு.கவினரிடம் அவரே நேரடியாகத் தெரிவிப்பு



**கொழும்பு, செப்ரெம்பர் 14**
**சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து கூட்டு எதிரணிப் பக்கமோ அல்லது வேறு தரப்புகளுக்கோ தாவ விரும்புவோர் விலகிச் செல்லலாம். யாரையும் இங்கு நாம் பிடித்து இழுத்து வைத்திருக்கமாட்டோம்.”**
**-இப்படி சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் ஆகியோரிடம் நேற்று முன்தினம் இரவு திட்டவட்டமாகவும், ஆணித்தரமாகவும், உறுதியாகவும் தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.** பக்கம் 18 »

## 20ஆவது திருத்தம் மீதான நீதிமன்றின் பரிந்துரை இன்று

கொழும்பு, செப்.14
அரசமைப்பிற்குக் கொண்டுவரப்படும் இருபதாவது திருத்தத்தின் மீதான விசாரணையை உயர்நீதிமன்றம் நேற்றுப் பூர்த்தி செய்தது. அதன் தீர்ப்பு – பரிந்துரை – இன்று சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் அனுப்பி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் திருத்தத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள பன்னிரண்டு மனுக்கள் மீதான விசாரணைகளை மூன்று நாள்களாக உயர்நீதிமன்றம் மேற்கொண்டது.

பக்கம் 18 »

## மஹிந்த பக்கத்திலிருந்து மைத்திரி பக்கம் தாவ இரண்டு முக்கிய தலைகள் தயாராம்!

### ஆனால் அரசுக்குள் இடமளிப்பதில்தான் சிக்கல்

கொழும்பு, செப்.14
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டு எதிரணியில் செயற்பட்டு வரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் இரண்டு பிரதான தலைகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பக்கம் தாவுவதற்குத் தயாராக உள்ளனராம்.

இது தொடர்பான தூதுப் பேச்சுகள் இடம்பெற்று இணக்க நிலையும் எட்டப்பட்டுவிட்டன என்கின்றன கொழும்பு வட்டாரங்கள்.

ஆனால், அணிமாறும் இந்த மூத்த இரு அரசியல்வாதிகளுக்கும் அரசுக்குள் முக்கிய அமைச்சுப் பதவி ஏதும் ஒதுக்கமுடியாத நிலைமை இருக்கின்றமையால், இந்த விடயம் இழுபறிக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த தேர்தலில் சிறி பக்கம் 18 »

## நீதிமன்றத்தில் மஹிந்தவை நிறுத்தலாம் என்கிறது அரசு

### ‘சில்’ துணி விடயத்தை அவர் பொறுப்பேற்கின்றமையால்

கொழும்பு, செப்.14
‘சில்’ துணி விநியோக வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டு, அந்த விடயம் தொடர்பாக சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள இருவருக்கும் அந்த விநியோகத்துக்கான உத்தரவைத் தாமே விடுத்தார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக ஒப்புக்கொள்கின்றமையால் அந்த விடயத்துக்காக அவரையும் நீதிமன்றத்தில் கொண்டு போய் நிறுத்தலாம்.

– இவ்வாறு அரசுத் தரப்பு பக்கம் 18 »

## சு.கவுக்குள் களையெடுப்பை ஆரம்பித்தார் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, செப்.14
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தனது தலைமைக்கு எதிராகக் குழப்பம் விளைவிப்போரைக் களையெடுக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தயாராகிவிட்டார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் நேற்றுத் தகவல் வெளியிட்டன.

முதல் நடவடிக்கையாக நேற்றுமுன்தினம் சுற்றுலா ஊக்குவிப்பு மற்றும் கிறிஸ்தவ விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் பதவியிலிருந்து அருந்திக பெர்னாண்டோ நீக்கப்பட்டார்.

மேல் மாகாண சபையிலும், வேறு ஓரிரண்டு மாகாண சபைகளிலும் முக்கிய பொறுப்புகளில் இருந்த சிலர் பதவி நீக்கப் பக்கம் 18 »




*மாணவி வித்தியா கொலை வழக்கின் பிரதான சந்தேகநபரான சுவிஸ் குமார் தப்பிச் செல்ல உதவினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்கவுக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியது. (விரிவான செய்தி 5ஆம் பக்கத்தில்)*

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் யாழ். நகரில் நேற்றுப் போராட்டம்




யாழ்ப்பாணம், செப்.14
அகில இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கமும், இணைந்த சேவைகள் உத்தியோகத்தர்களும் சேர்ந்து நேற்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியிருந்தனர்.

வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் தாபன விதிக் கோவைக்கு பக்கம் 18 »

## இராணுவத்தைப் பயன்படுத்தி கஞ்சா உற்பத்திக்குத் திட்டம்

கொழும்பு, செப்.14
இராணுவத்தினரின் உதவியுடன் உள்ளூர் மருத்துவ உற்பத்திகளுக்காக கஞ்சாச் செய்கை மேற்கொள்ளப்படவிருப்பதாக, அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் பக்கம் 18 »




## இலங்கை நிலைமை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் திருப்தி

### ஆனால் இன்னும் பல செய்ய வேண்டுமாம்



கொழும்பு, செப்.14
இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள், தொழிலாளர் மற்றும் சுற்றாடல் தரங்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் நேற்றுத் தனது திருப்தியை வெளியிட்டுள்ளது. அதே நேரம், பல விடயங்களில் இன்னும் மீளமைப்புக்கள் பக்கம் 18 »

## ‘சில்’ துணி கொள்வனவு ஊழல் விவகாரம்:

# லலித் வீரதுங்கவுக்கு தாமே உத்தரவிட்டார் என்றால் அதை மஹிந்தர் நீதிமன்றத்தில் கூறியிருக்கலாமே?

‘‘தன்னுடைய செயலாளராகவிருந்த லலித் வீரதுங்க ‘சில்’ துணிகளைக் கொள்வனவு செய்து விநியோகிப்பதற்கு உத்தரவிட்டவர் தாமே என்றும், அதற்கான பொறுப்பைத் தாம் ஏற்கின்றார் என்றும் மஹிந்த ராஜபக்ஷ இப்போது கூறுகின்றமை வெறும் நடிப்பன்றி வேறில்லை.’’

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இவ்வறு கூறினார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் பிரகாரம் லலித் வீரதுங்க என்பவர் அரச அதிகாரி என்ற வரையறைக்குள் வரமாட்டார் என்றும் அவரை நீதிமன்றம் தண்டிக்க முடியாது என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாகஊடகவியலாளர் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்திடம் கேள்வியெழுப்பிய போது - மஹிந்த ராஜபக்ஷவுக்கு அரசமைப்புத் தொடர்பில் போதுமான தெளிவு இல்லை. 19ஆவது திருத்தச் சட்டம் அல்லது அதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த சட்டங்களின் பிரகாரம் லலித் வீரதுங்க அரச அதிகாரி என்ற வரையறைக்குள் உள்ளடக்கப்படுகின்றார். அவ்வாறு இருந்த காரணத்தினால் தான் இன்னோர் அரச நிறுவனத்தின் பணத்தைக் கொண்டு ‘சில்’ அனுட்டானத்திற்கான துணிகளை விநியோகிக்கும் நடவடிக்கையில் அவர் ஈடுபட முடிந்தது.



ஜே.வி.பியின் எம்.பி. விஜித ஹேரத் இப்படிக் கேள்வி

எனவே, இந்தச் செயற்பாட்டில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் அவர் தண்டிக்கப்படவேண்டிய ரேயாவார். அத்துடன் ‘சில்’ அனுட்டானத்திற்கான துணிகளை விநியோகிக்க உத்தரவிட்டவர் தாமே என்றும் அதற்கான பொறுப்பைத் தாம் ஏற்றுக் கொள்கிறார் என்றும் மஹிந்த இப்போது கருத்து வெளியிடுகின்றார்.

அவ்வாறெனில் அது தொடர்பான நீதிமன்ற விசாரணையின் போது அவர் சம்பவத்திற்கான பொறுப்பை ஏற்றிருக்க வேண்டும். இப்போது அவ்வாறு கூறுகின்றமை வெறும் நாடகமேயன்றி வேறில்லை. - என்று விஜித ஹேரத் தொடர்ந்தும் பதிலளித்துள்ளார். (உ)

---

முன்னைய அரசில் மோசடி செய்த

# திமிங்கிலங்கள் இனி மாட்டும்!

சதுர சேனாரத்ன எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு,செப்.14

முன்னைய அரசின் ஆட்சிக்காலத்தில் மோசடிகளில் தொடர்புடைய திமிங்கிலங்கள் இனி சட்டத்தின் பிடியில் மாட்டும்.

-இவ்வாறு சதுர சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் ஒருங்கிணைப்புச் செயலாளர் திசாநாயக்கவின் புதல்வரின் திருமணம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மஹிந்த அரசின் முறைகேடுகளுடன் தொடர்புடைய அனைவரும் தண்டிக்கப்படுவார்கள். தற்போதைக்கு முறைகேடுகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் மட்டத்தினர் தண்டிக்கப்பட்டாலும், எதிர்வரும் நாள்களில் முக்கிய புள்ளிகள் பலரும் சட்டத்தின் பிடியில் சிக்குவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

---

## இனவாத சக்திகளின் இடையூறுகள்:

# மனித உரிமை ஆணையாளருக்கு ஜனாதிபதி நேரில் விளக்குவாராம்

கொழும்பு,செப்.14

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அரசாங்கம் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் இனவாத சக்திகளின் இடையூறுகள் என்பன குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரில் எடுத்துரைக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா. பொதுச் சபையின் 72 ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக அடுத்த வாரம் நியூயோர்க் செல்லவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐ.நா. செயலாளர் நாயகம், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், இந்திய பிரதமர், ஜப்பான் பிரதமர், சீன ஜனாதிபதி மற்றும் ஜேர்மன் அதிபர் உள்ளிட்ட பல முக்கிய தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.



குறிப்பாக இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அதிருப்தி வெளியிட்டுள்ள நிலையில், அவருடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்குறித்த விடயங்களைத் தெரிவிப்பாரெனக் கூறப்படுகிறது.

அத்தோடு, காணாமற்போனோர் குறித்த அலுவலகத்தை நிறுவும் செயற்பாடு, புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பன தொடர்பாகவும் அவர் விளக்கமளிக்கவுள்ளார் என்று கூறப்பட்டது.

இதேவேளை, ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தொடரில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மைத்திரி சிறப்புரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## ஆரோக்கிய அன்னையின் வருடாந்த திருவிழா

*யாழ்ப்பாணம்,செப்.14*

*யாழ். போதனா வைத்திய சாலையின் தூய ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். பேராயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திரு விழா திருப்பலியும் இடம்பெறும்.* *(ச)*

---

# சட்டவிரோதமாக மீன்பிடிப்பவர்களுக்கு சாதகமாக கடற்றொழில் திணைக்களம் செயற்படுகின்றது!

மன்னார்,செப்.14

சட்டவிரோதமாக மீன்பிடிப்பவர்களுக்குச் சாதகமாகவே கடற்றொழில் திணைக்களம் செயற்படுகின்றது. இதனால், மன்னார் மாவட்ட மீனவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.எம்.ஆலம் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

மன்னார் மீனவக் கூட்டுறவு சங்க சமாசத்தில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடல் சூழலுக்கும், கடல் வளங்களுக்கும் அழிவை ஏற்படுத்தும் இழுவை மடி மீன்பிடி முறைமையை தடை செய்ய மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக நாடாளுமன்றம் ஊடாக சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இன்று வரை அந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால், உள்ளூரில் உள்ள மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு தொடர்ந்தும் முகம் கொடுத்து வருகின்றனர்.

**வட மாகாண கடற்றொழிலாளர் இணையத் தலைவர் குற்றச்சாட்டு**

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்த நிலையில், எமது கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கைகள் சற்றுக் குறைவடைந்திருக்கின்றன. இருப்பினும், உள்ளூரில் உள்ள சில மீன வர்கள் சட்டவிரோதமான மீன்பிடியை மிகவும் தீவிரமாக செய்துவருகின்றாள்கள். நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட இழுவை மடித் தடைச் சட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும் -என்றார்.

(ச-112)

# காணாமற் போனோர் அலுவலகம் நாளைமுதல் யாழில் இயங்கும்!

கொழும்பு, செப்.14
இலங்கையில் காணாமற் போனோர் தொடர்பான அலுவலக செயற்பாடுகள் நாளை 15ஆம் திகதிக்கு பின்னர் உரிய வகையில் முன்னெடுக்கப்படும் என்று தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அமைச்சின் செயலாளர் சிவாஞானஜோதி தெரிவித்துள்ளார்.

காணாமற் போனோர் அலுவலக செயற்பாட்டு வர்த்தமானி அறிவித்தலில் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் கையெழுத்திட்டார்.

இதனையடுத்து இந்த அலுவலகப்பணிகள் நாளை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த அலுவலகத்தின் பணிகள் காணாமற் போனோரை அறிதலும் அதற்கான தீர்வை வழங்குவதுமாக அமையும் என்று அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி குறிப்பிட்டுள்ளார்

நாளைக்குப் பின்னர் காணாமற்போனோர் பணியகத்துக்கான தலைவர் உட்பட ஏழு அங்கத்தவர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள்.

அரசமைப்பு பேரவையின் பரிந்துரைகளுக்கு அமைய, இந்த நியமனங்களை ஜனாதிபதிமேற்கொள்ளவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர், பணியத்துக்கான நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்பட்டு, பிரிவுகளுக்கான ஆளணி நியமனங்கள் இடம்பெறும்.

இதையடுத்து, அலுவலகங்களை எந்தப் பகுதிகளில் நிறுவுவது என்பது தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும். இந்த அலுவலகம் நான்கு பணிகளை நோக்கமாக கொண்டு இயங்கும்.

1. காணாமற்போனோரை தேடுவதற்கான பொறிமுறையை உருவாக்குதல்.

2. அவர்கள் எவ்வாறான சூழ்நிலையில் காணாமற்போனார்கள் என்பதைக் கண்டறிதல்.

3. அவர்கள் தற்போது எந்த இடத்தில் இருக்கின்றனர் என்பது தொடர்பில் ஆராயும்.

4. அத்துடன், இதுபோன்ற சம்பவங்களை எதிர்காலத்தில் குறைப்பதற்கான பரிந்துரைகளை முன்வைக்கும்.

மேற்குறிப்பிட்ட நான்கு பணிகளை அடிப்படையாகக் கொண்டே இந்த அலுவலகம் இயங்கும் என்று அவர் விளக்கமளித்துள்ளார். (உ)

# சாட்சியமளிக்குமாறு அர்ஜுனனை யாரும் கட்டாயப்படுத்த முடியாது!

## ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, செப். 14
பிணை முறி மோசடி விவகாரம் தொடர்பாக சாட்சியமளிக்குமாறு அர்ஜுன் அலோசியஸை வற்புறுத்த முடியாது என ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் கடந்த ஐந்தாறு நாள்களாக அர்ஜுன் அலோசியஸை தொடர்ச்சியாக சமுகமளித்து சாட்சியமளிக்குமாறு ஆணைக்குழு உத்தரவிட்டிருந்தது.

எனினும் அவரை அவ்வாறு வற்புறுத்த முடியாது என்றும், அர்ஜுன் அலோசியஸ் சுயவிருப்பின்பேரில் மட்டுமே சாட்சியமளிக்க முடியும் என்றும் பெர்பெசுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி காமினி மாரப்பன நேற்று முன்தினம் வாதமொன்றை முன்வைத்திருந்தார்.

அவரது வாதம் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு இன்று தனது கருத்தை வெளியிட்ட போதே அர்ஜுன் அலோசியஸை சாட்சியமளிக்க வற்புறுத்த முடியாது என்று தெரிவித்துள்ளது.

அதே நேரம் மத்திய வங்கியின் பிணைமுறி மோசடிகள் தொடர்பில் 13 முக்கிய விடயங்கள் குறித்து அர்ஜுன் அலோசியஸிடம் விளக்கம் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்புடன் காத்து இருந்தனர் என ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# அம்பாந்தோட்டையில் திடீரென எரிந்து நாசமாகியது மீன்பிடிப் படகு

கொழும்பு, செப். 14
அம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகொன்று தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

கடந்த ஒரு மாதகாலமாக இந்த மீன்பிடிப்படகு திருத்த வேலைகளுக்காக துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் நேற்று மாலை படகில் திடீரென தீப்பற்றி எரிந்து பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

படகின் சந்தைப் பெறுமதி 90 இலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சம்பவத்தின் போது படகில் இருந்த நபர் கடலில் குதித்து உயிர்தப்பியுள்ளார். தீவிபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

மேலும், இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (உ)

# ஜனாதிபதி அமெ. பயணம்

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நா. தலைமையகத்தில் ஆரம்பமாகியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 72ஆவது பொதுச்சபைக்கூட்ட அமர்வுகளில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை மறுதினம் அமெரிக்காவுக்கு புறப்பட்டுச் செல்லவுள்ளார்.

எதிர்வரும் 19ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடரின் அரச தலைவர்கள் மாநாட்டில் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

# மீரிகமவில் நேற்றுத் திடீரென ஹெலி ஒன்று தரையிறக்கம்



கொழும்பு, செப். 14
கடும் மழை காரணமாக பயணப்பாதை தெளிவாகப் புலப்படாத நிலையில் ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்று மீரிகம பிரதேசத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

நான்கு அமெரிக்கர்கள் கண்டியில் இருந்து தனியார் ஹெலிக்கொப்டர் ஒன்றில் இரத்மலானைக்கு வருகை தந்து கொண்டிருந்த நிலையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

பயணப்பாதை தெளிவின்மை காரணமாக விமானம் மற்றும் பயணிகளின் பாதுகாப்புக் கருதி விமானிகள் ஹெலிக்கொப்டரை மீரிகம, லோலுவாகொட பிரதேசத்தில் உள்ளமைதானமொன்றில் அவசரமாகத் தரையிறக்கியுள்ளனர்.

பின்னர் அதில் பயணித்த நான்கு அமெரிக்கர்களும் தரைமார்க்கமாக கொழும்புக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை அவ்விடத்துக்கு வருகை தந்த மீரிகம பொலிஸார் செய்து கொடுத்துள்ளனர்.

அத்துடன் ஹெலிக்கொப்டர் மற்றும் விமானிகளுக்கான பாதுகாப்பும் பொலிஸாரினால் வழங்கப்பட்டுள்ளது.

இன்று காலையில் வானம் தெளிவாகத் தெரியத் தொடங்கிய பின்னர் ஹெலிக்கொப்டரை இரத்மலானைக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அறியக்கிடைத்துள்ளது. (உ)

# எகிறுகின்றது தேங்காய் விலை!



யாழ்ப்பாணம், செப்.14
யாழ். மாவட்டத்தில் தேங்காயின் விலை திடீர் என அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் பிரதான சந்தைகளில் ஒன்றான திருநெல்வேலிப் பொதுச் சந்தை உள்ளிட்ட பொதுச் சந்தைகளில் நேற்றைய விலை நிலைவரப்படி பெரிய தேங்காய் ஒன்று 80 ரூபா முதல் 85 ரூபா வரையும், நடுத்தரத் தேங்காய் ஒன்று 70 ரூபாவாகவும், சிறிய தேங்காய் ஒன்று 60 ரூபா முதல் 65 ரூபா வரையும் விற்பனை செய்யப்பட்டன.

யாழ். மாவட்டத்திலிருந்து பெருமளவு தேங்காய்கள் வெளிமாவட்டங்களிற்கு அனுப்படுகின்றமையாலும், காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாகவும் கடந்த சில தினங்களாக யாழிலுள்ள சந்தைகளில் தேங்காய்களின் வரத்தில் பெரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதுவே தேங்காய்களின் திடீர் விலை அதிகரிப்பிற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சந்தைக்கு வெளியே வியாபார நிலையங்களில் ஒரு பெரிய தேங்காய் 95 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

தேங்காயின் விலை சடுதியாக அதிகரித்துள்ளமையால் வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் பலர் தேங்காய் விற்பனையை இடைநிறுத்தியுள்ளனர்.

தேங்காய்களின் திடீர் விலை அதிகரிப்பால் நடுத்தர மற்றும் குறைந்தளவு வருமானம் பெறும் குடும்பங்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன.

இதேவேளை, கடந்தசில தினங்களுக்கு முன்னர் பெரிய தேங்காயொன்று 70 ரூபா முதல் 75 ரூபா வரையும், நடுத்தரத் தேங்காய் 50 ரூபாவாகவும், சிறிய தேங்காய் 40 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

# ஊடகவியலாளரின் வீட்டில் 51 பவுண் நகைகள் திருட்டு



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், செப்.14
பிரபல தமிழ் ஊடகவியலாளர் இரத்தினம் தயாபரனின் வீட்டில் 51 தங்கப்பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன. நேற்று மதியம் இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

உடுப்பிட்டியில் உள்ள அவரது வீட்டில் மிகவும் திட்டமிட்ட முறையில் இடம்பெற்ற இத்திருட்டுத் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அவரும் அவரது மனைவியும் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு அலுவலகங்களுக்குச் சென்றிருந்தனர். இந்நிலையில், வீட்டில் ஆள்கள் எவரும் இல்லை என்பதை உறுதிப் படுத்திய நபர்கள் வீட்டின் ஜன்னல் கம்பிகளை உடைத்து உள்ளே சென்று வீட்டில் இருந்த 51 பவுண் நகைகளைத் திருடிச் சென்றனர். மேலும், ஒரு தொகுதி பணமும் திருடப்பட்டுள்ளது.

ஆசிரியையான அவரது மனைவி பாடசாலைமுடிவடைந்து பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பிய போதே திருட்டு இடம்பெற்ற விடயம் தெரியவந்தது.

இது தொடர்பாக வல்வெட்டித் துறைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, நேரில் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். தடயவியல் குழுவினரும் அங்கு சென்று தடயங்களைப் பதிவு செய்தனர். இத்திருட்டுத் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (உ)

# எரிவாயு விலை கூட மாட்டாதாம்!



சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்கும் எண்ணம் தற்போதைக்கு அரசாங்கத்துக்குக் கிடையாது என அமைச்சரவைப் பேச்சாளரான ராஜித சேனாரத்ன நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அதன்போது ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் சமையல் எரிவாயுவின் விலையை 8 தடவைகள் குறைத்திருக்கின்றது. இந்நிலையில் எரிவாயுவின் விலையை 10 வீதத்தால் அதிகரிப்பதற்கான கோரிக்கையை நிறுவனத்தினர் முன்வைத்தார்கள். எனினும் இது தொடர்பில் அடுத்த வருடம் தீர்மானிக்கலாம் என அமைச்சரவையில் முடிவுசெய்யப்பட்டது" – என அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## உள்ளூராட்சித் தேர்தல் முறைமை: விழிப்புணர்வூட்டல் மிக அவசியம்

நீண்ட இழுபறிக்குப் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஜனவரியில் நடைபெறும் என்பது ஓரளவுக்கு உறுதியாகி விட்டது.

பொங்கலுக்கு அடுத்து வரும் வாரத்தில் அத்தேர்தல் நடைபெறும் என்று தெரிகின்றது.

இம்முறை இலங்கை முழுவதிலும் ஒரே சமயத்தில் இந்த உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறப் போகின்றது.

சுமார் நாற்பது வருடங்களின் பின்னர் முதல் தடவையாக வட்டார ரீதியில் வாக்களிப்பும் தேர்தலும் இடம்பெறப் போகின்றன.

போதாக்குறைக்கு நாற்பது சதவீத உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையின் கீழ் தேர்வு செய்யப்படப் போகின்றார்கள்.

இரண்டும் கலந்த ஒரு பொறி முறை என்கிறார்கள்.

ஆனால் அந்தக் கலப்புப் பொறிமுறை எத்தகையது என்று நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது வீத மானோருக்குத் தெரியாது.

இந்தத் தேர்தல் குறித்தும் அதன் வாக்களிப்பு முறைமை குறித்தும், வாக்குகள் எண்ணப்பட்டு வெற்றி, தோல்வி மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் எவ்வாறு முன்னெடுக்கப்பட போகின்றது என்பது குறித்தும் இன்னும் பலருக்கும் - சமூகத்தில் படித்தவர்கள் அனேகமானோருக்கும் கூட - தெரியாத நிலைமை.

போதாக்குறைக்கு, வேட்பாளர் பட்டியலில் மகளிர் ஒதுக்கீடு பற்றியும் கட்டாயமாக்கப்பட்ட தேர்தல் விதிகள் உள்ளன. வட்டார ரீதியில் ஒரு கட்சி அல்லது சுயேச்சைக் குழு சார்பில் களமிறங்கும் வேட்பாளர்களில் இத்தனை வீதத்தினர் கட்டாயம் மகளிராக இருக்க வேண்டும், விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தெரிவுக்காக ஒவ்வொரு உள்ளூராட்சி சபைக்கும் சமர்ப்பிக்கப்படும் வேட்பாளர் பட்டியலில் ஐம்பது வீதத்துக்குக் குறையாத இடம் மகளிருக்கு வழங்கப்பட வேண்டும், ஒரு கட்சி அல்லது குழு சார்பில் வெற்றியீட்டி உள்ளூராட்சி சபைக்குத் தெரிவாவோரில் குறைந்த பட்சம் காற்பங்கினர் மகளிராக இருக்கக் கூடியதாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் தெரிவாவோரின் முன்னுரிமை மகளிருக்கு வழங்கப்பட வேண்டும் என்றெல்லாம் கூட விதிமுறைகள் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

ஒரே சமயத்தில் நாடு முழுவதிலும் பல நூற்றுக் கணக்கான உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்கையில் இவை பற்றியெல்லாம் கட்சிகள் கவனிக்க வேண்டியிருக்கும்.

ஆகையினால், இத்தேர்தல்கள் பெருங்குழப்பத்திலும் மக்களை மயக்கத்திலும் வைத்துக் கொண்டு நடந்து முடிவனவாக அமைந்து விடும் ஆபத்துண்டு.

முதலில் இந்தத் தேர்தல்கள் முறைமை குறித்து கட்சிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் ஒழுங்கு முறையான விளக்கங்கள், விவரிப்புகள் வழங்கப்பட வேண்டும்.

அதற்குப் பின்னர் மக்களுக்குப் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

வட்டார முறைத் தேர்தல்களை மக்கள் சந்தித்து நான்கு தசாப்தங்களாகிவிட்டன.

இந்தப் பின்புலத்தில் மக்களுக்குத் தத்தமது உள்ளூராட்சி சபையில் எத்தனை வட்டாரங்கள் உள்ளன, தாங்கள் எந்த வட்டாரம், வட்டாரத்துக்கு வெளியில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் எத்தனை பேர் தெரிவு செய்யப்படப் போகின்றார்கள், அவர்களைத் தெரிவு செய்யும் முறைமை எத்தகையது என்பவற்றையெல்லாம் புரிய வைக்க வேண்டியிருக்கும்.

ஆனால், இவை பற்றியெல்லாம் தேர்தல் திணைக்களமோ, அரசியல்வாதிகளோ, அரசியல் தலைமைகளோ சிந்தித்த பாடாகத் தெரியவில்லை.

இந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டம் அண்மையில் நாடாளுமன்றுக்குக் கொண்டு வரப்பட்ட போது நாடாளுமன்ற உறுப்பினர்களினாலேயே சுமார் ஐம்பது திருத்தங்கள் வரை செய்யப்பட்டன எனக் கூறப்படுகின்றது.

அவை யாவை, அந்தத் திருத்தங்கள் எல்லாம் மூலச் சட்டத்தில் உருப்படியாகச் சேர்க்கப்பட்டு விட்டனவா என்பதும்கூட யாருக்கும் உறுதியாகத் தெரியாது.

இது தொடர்பான சட்டமூலத்தை எம்.பிக்கள் நாடாளுமன்றத்தால் அங்கீகரித்துவிட்டு வந்துவிட்டார்கள். அந்தத் திருத்தங்களின் அடிப்படையில் சட்டமூலத்தில் சபாநாயகர் ஒப்பமிட, அது சட்டமுமாகி, நடைமுறைக்கும் வந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆனால், அந்தச் சட்டத்தின் பிரதி எம்.பிக்களின் கைகளில்கூட இப்போது இல்லை.

ஆனால் குழப்பகரமான - மிகப் புதிதான - பல அம்சங்கள் அடங்கிய தேர்தல் முறைமையுடன் வாக்களிப்பு ஒன்று இன்னும் நான்கு மாதங்களுக்குள் நடக்கப்போகின்றது.

அதற்கு மக்களைத் தயார்படுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவேயில்லை என்பது விசனத்துக்குரியது.

சரியான விழிப்புணர்வு, அறிவூட்டலுடன் இத்தேர்தல் நடத்தப்படாவிட்டால் அது பெரும் குழப்பத்தில் முடியும் என்பது திண்ணம்.

# சமிக்ஞை மொழிச் சட்ட மூலத்துக்கு அங்கீகாரம் வழங்கியது அமைச்சரவை!

சமிக்ஞை மொழிச் சட்ட மூலத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது.

அங்கவீனம் தொடர்பான தேசியக் கொள்கையின் மூலம் சமிக்ஞை மொழி விசேட தேவையுடைய நபர்களின் தொடர்பாடல் மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட மொழியாக சமிக்ஞை மொழியைக் கொண்டுவருவதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில், முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது.

சமிஞ்ஞை மொழி சட்ட மூலத்தைத் தயாரிக்கின்றமை தொடர்பில் சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் மலைநாட்டு உரிமைகள் தொடர்பான அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 45 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு 'சுறக்ஸா' காப்புறுதித் திட்டம் அறிமுகம்!

### கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு



45 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு சுறக்ஸா காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

-இவ்வாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

காலி சவுத் லாண்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாணவர்களின் பாதுகாப்புக்காக அரசு பல விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்தி உள்ளது. இலவசக்கல்வியை மேலும் பாதுகாப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போதைய காலத்துக்கு ஏற்றவகையில் கல்வி தொடர்பில் உன்னதமான பல நடவடிக்கைகளை எதிர் காலத்தில் மேற்கொள்ள உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# டெங்குவால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க தொழிற்சங்கம் கோரிக்கை!

கொழும்பு, செப்.14

டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து அரச ஊழியர்களுக்கும், ஊதியத்துடன் கூடிய விசேட விடுமுறையை வழங்குவதற்கான நடவடிக்கையை அரசு முன்னெடுக்க வேண்டும் .

-இவ்வாறு தேசிய தொழிற்சங்க நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இத்தகைய விசேட விடுமுறையை வழங்குவதற்கான சூழ்நிலை தற்போது காணப்படுகிறது என அந்த நிலையத்தின் செயலாளர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார். (ச)

# புத்தளம் - அருவக்காடு பகுதியில் திண்மக் கழிவகற்றும் தொகுதி!

### அமைச்சரவை அங்கீகாரம்

புத்தளம் - அருவக்காடு பிரதேசத்தில் திண்மக் கழிவுகளை வெளியேற்றும் தொகுதியை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது.

மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இந்தப் பணி 2020 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பிக்கப்பட உள்ளது.

இந்தத் திட்டத்தால் நகர மற்றும் சன நெருக்கடி மிகுந்த பிரதேசங்களில் உள்ள திண்மக் கழிவுகளை இலகுவாக வெளியேற்ற முடியும். (ச)

# அகில இலங்கை சைவ மாநாடு இரண்டாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 13

சைவ பரிபாலன சபை நடத்தும் அகில இலங்கை சைவ மாநாடு நாளை வெள்ளிக் கிழமை தொடக்கம் எதிர்வரும் 17ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் 55, கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

முதல்நாள் நிகழ்வுகள் தொடர்பாக நேற்றைய தினம் இப் பத்தியில் பிரசுரித்திருந்தோம். இரண்டாம் நாள் நிகழ்வுகள் தொடர்பான விவரங்கள் இன்று தரப்படுகின்றன.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை ஓய்வுபெற்ற பேராசிரியர் கலைவாணி இராமநாதன் தலைமையில் நடைபெறும்.

இறை வழிபாட்டைத் தொடர்ந்து செல்வி க.சித்ராவின் திருமுறை ஓதலுடன் மாநாடு ஆரம்பமாகும்.

ஆசியுரையை சைவக் குருமார் அர்ச்சகர் சபைச் செயலாளர் சிவஸ்ரீ ச.மகாலிங்கசிவக் குருக்கள் வழங்குவார்.

வரவேற்புரையை சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேலும் 'மாறிவரும் சமுதாய மாற்றத்தால் சைவப் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளும் சவால்களும்' என்னும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவை யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாந்தினி அருளானந்தமும் 'சைவ சமயமே சமயம்' என்னும் தலைப்பில் சிறப்புரையைக் கம்பவாரிதி இ. ஜெயராஜும், நன்றியுரையை செல்வி விநோதினி சண்முகலிங்கமும் வழங்குவர். (ச)

### நாளை

15.09.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : புனர்பூசம் பி.இ.3.32 வரை
திதி : தசமி மு.இ. 7.05 வரை
சுபநேரம் : 06.03 – 07.33
இராகுகாலம் : 10.33 – 12.03

# ஐ.நாவின் குற்றச்சாட்டுகள் நியாயமே அற்றவையாம்!

## அரசுத் தரப்பில் விசனம்



அதன் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன், இலங்கை மீது


கொழும்பு, செப்.14

தமிழ் மக்களின் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முழுமூச்சுடன் செயற்பட்டு வருவதாகவும், அவ்வாறான சூழ்நிலையில் ஐ.நா. முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் நியாயமற்றவை எனவும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 36ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ளது. கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் உரையாற்றிய அதன் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன், இலங்கை மீது காரசாரமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். இதுகுறித்து தமிழ் நாளிதழ் ஒன்றிற்கு கருத்துத் தெரிவித்த போதே கிரியெல்ல மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னர் வடக்கு கிழக்கில் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவருகிறோம் எனத் தெரிவித்துள்ள அமைச்சர், சகல பிரச்சினைகளையும் தீர்க்க மேலும் கால அவகாசம் அவசியமெனக் கூறியுள்ளார்.

அத்தோடு, இந்தப் பிரச்சினைகளை பொறுமையாகவே தீர்க்க முடியுமென்றும், ஐ.நா. ஆணையாளரின் அவசரத்திற்கு எதுவும் செய்ய முடியாதென்றும் அமைச்சர் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (உ)



## வவுனியாவில் கடும் மழை!

வவுனியாவில் கடந்த இரண்டு நாள்களாக இடியுடன் கூடிய கடும் மழை பெய்து வருகின்றது.

இதன் காரணமாக வவுனியாவில் அமைந்துள்ள குளங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

அத்துடன், அங்கு பெரும்போகப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான நீர் கிடைத்துள்ளது என அந்தப் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

வரட்சி காரணமாக வவுனியாவில் நிலவிய குடிதண்ணீர் தட்டுப்பாடு நீங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வட கொரியாவுக்கு இலங்கை கண்டனம்

கொழும்பு, செப்.14

ஆறாவது அணுகுண்டுப் பரிசோதனையை கடந்த செப்ரெம்பர் 3ஆம் திகதி நடத்தியுள்ள வடகொரியாவுக்கு, இலங்கை சுமார் பத்து நாள்கள் கழித்துக் கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

இந்த அணுகுண்டுச் சோதனை ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்களை மீண்டும் மீறுவதுடன், பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் அமைந்துள்ளது.

“இந்தச் சூழலில், வடகொரியாவை மேலதிக நடவடிக்கைகளில் இருந்து விலகி இருக்குமாறும், ஐ.நா. தீர்மானங்களுடன் இணங்கிச் செயற்படுமாறும், பேச்சுக்களை ஆரம்பித்து, இந்த விவகாரத்துக்கு அமைதியான தீர்வைக் காணுமாறும், அதன் மூலம் வடகொரிய மக்களுக்கும் பிராந்தியத்துக்கும் அமைதி மற்றும் நலன்களைப் பாதுகாக்குமாறும் கேட்டுக்கொள்ளும் அனைத்துலக சமூகத்துடன் இலங்கையும் இணைகிறது.

“ஐ.நா. பாதுகாப்புச் சபையில் செப்ரெம்பர் 11ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வரவேற்பதுடன், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் தானும் அர்ப்பணிப்புக் கொண்டுள்ளது என்பதையும் இலங்கை அரசாங்கம் வலியுறுத்துகிறது - என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வடகொரிய விடயத்தில் அண்மைக்காலம் வரை இலங்கை அரசு நழுவல், வழுவல் போக்கையே கடைப் பிடித்து வந்தது என்றும் -

இதனால், நடைபெறவிருக்கும் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக அடுத்த வாரம் வொஷிங்டன் செல்லும் இலங்கை ஜனாதிபதி அங்கு கடும் அழுத்தங்களை எதிர் கொள்வார் என்றும் -

செய்திகள் வெளியாகியுள்ள பின்னணியிலேயே இந்தக் கண்டனத்தை கொழும்பு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

### இறுதிப் போரில் பங்கேற்ற

## 18 இராணுவ அதிகாரிகளுக்கு ஐரோப்பா செல்ல இயலாதாம்!

இறுதிக்கட்டப் போரில் பங்கேற்ற 18 இராணுவ அதிகாரிகளுக்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணங்களை மேற்கொள்வதற்கு முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்ஸிலில் தீர்மானங்களை அமுல்படுத்துமாறு, ஆணையாளர் சயிட் அல் ஹுசெய்ன் உறுப்பு நாடுகளிடம் கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கைக்கு அமைய வன்னிப் போருடன் தொடர்புடைய 18 இராணுவ அதிகாரிகளுக்கு, ஐரோப்பிய நாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும் என்று கூறப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்ஸிலில் தீர்மானத்திற்கு அமைய இந்த இராணுவ அதிகாரிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டால் அவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடியும்.

அத்துடன் சர்வதேச நீதிமன்றப் பிரகடனத்தை அமுல்படுத்துமாறு சயிட் அல் ஹுசைன் கோரிக்கை விடுத்துள்ளார் எனவும், உறுப்பு நாடுகளின் அனுமதியின்றி இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனவும் கொழும்பு ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த பிரகடனத்திற்கு அமைய யாரை கைது செய்ய வேண்டும் என்ற பட்டியலை ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் அதிகாரி யஸ்மீன் சூகா, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலிடம் சமர்ப்பித்துள்ளார் என்றும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

## ரயன் ஜயலத்துக்கு மீண்டும் மறியல்!



மருத்துவப் பீட மாணவர் செயற்பாட்டுக்குக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ரயன் ஜயலத்தை மீண்டும் 20 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சுகாதார அமைச்சுக்குள் பலவந்தமாக நுழைந்து, அங்குள்ள சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தமை தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டார். (ச)

### சுவிஸ்குமார் தப்பிச் செல்ல உதவிய வழக்கு:

# முன்னாள் டி.ஐ.ஜிக்கு நீதிமன்றில் பிணை!


கொழும்பு, செப்.14

யாழ்.புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் பிரதான சந்தேகநபரான சுவிஸ் குமார் தப்பிச்செல்ல உடந்தையாகச் செயற்பட்டாரென்ற குற்றச்சாட்டில் கைதான, வடக்கு மாகாண முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்க பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று புதன் கிழமை இந்த வழக்கு மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போது, அவரை மூன்று லட்சம் ரூபா ரொக்கம் மற்றும் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான நான்கு சரீரப்பிணைகளில் செல்ல நீதிவான் எம்.எம்.றியாழ் உத்தரவிட்டார்.

அத்தோடு, வழக்கு இடம்பெறும் சந்தர்ப்பத்தில் சந்தேகநபர் வெளிநாட்டிற்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டதுடன், அவரது கடவுச் சீட்டையும் நீதிமன்றில் ஒப்படைக்கவும் கட்டளையிடப்பட்டுள்ளது.

வழக்கு தொடுநர் தரப்பில் ஆஜரான அரச சட்டவாதி நிசாந்தன், சந்தேகநபருக்குப் பிணை வழங்குவதற்குக் கடும் ஆட்சேபனை தெரிவித்த போதிலும், ஆட்சேபனைக்கான போதிய காரணங்கள் முன்வைக்கப்படவில்லை எனத் தெதிவித்து சந்தேகநபருக்கு நீதிவான் பிணை அனுமதி வழங்கினார்.



இதேவேளை, ஒவ்வொரு மாதமும் முதல் திங்கட்கிழமைகளில் கொழும்பிலுள்ள குற்றப்புலனாய்வுதிணைக்களத்திற்கு சமுகமளித்து அங்கு சந்தேகநபர் கையொப்பமிட வேண்டுமென உத்தரவிட்ட நீதிவான், வழக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (உ)

## சாரணர் பாசறை நிகழ்வுகள்

காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்தின் ஆண்டு பாசறை விழாவும் குருளைச் சாரணர் வெளிக்கள நாள் நிகழ்வும் நாளை 15 ஆம் திகதி முதல் சுழிபுரத்தில் நடைபெறும்.

சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி மைதானத்தில் பாசறை நிகழ்வுகள் நடைபெறும் என்று சாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சண்முகராஜா தெரிவித்துள்ளார்.

# 20 ஆவது திருத்தத்தை எதிர்ப்பவர்கள் சரியான காரணத்தைக் கூற வேண்டும்!

## இப்படிக் கூறுகிறார் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர்

வந்தாறுமூலை, செப். 14

20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பலரும் பல்வேறு விமர்சனங்களை முன்வைக்கின்றனர். இந்தத் திருத்தச் சட்டத்தை எதிர்ப்பவர்கள் அதற்கான சரியான காரணத்தைக் கூற வேண்டும்.

-இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலை - பலாச்சோலை வீதி செப்பனிடும் பணி நேற்று புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எந்தவோர் அரசியல் நடவடிக்கையாக இருந்தாலும் தீர்வை எழுத்துருவத்தில் நடைமுறைப்படுத்துகின்றமையே இறுதி நடவடிக்கையாக இருக்கும். அந்த வகையில் எமது விடுதலைப் போர்கள் சரியான இடத்தை எய்திருக்கின்றனவா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. போராட்டத்தில் எமது உறவுகள் விட்ட தொடர்ச்சியை, அஞ்சல் ஓட்டம் போல இப்போது அடுத்தகைக்கு மாற்றி நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

மாகாணசபைத் தேர்தல்களை ஒரே சீராக்க வேண்டும் என்பதற்காகவே 20ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இனிமேல் மாகாண சபைத் தேர்தல்கள் மாகாண வட்டாரங்கள் அடிப்படையில் தான் நடைபெறும்.



நாடாளு மன்றத் தேர்தல் தொகுதி அடிப்படையிலும், உள்ளூராட்சித் தேர்தல் வட்டாரங்கள் அடிப்படையிலும் நடைபெற உள்ளன.

இதேவேளை, சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எப்படி உடைக்கலாம் என்று எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். கூட்டமைப்பால் ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்டவர்களே எங்களுக்கு எதிராகச் செயற்படுகின் றார்கள். இது மிகுந்த வருத் தத்தை அளிக்கின்றது. -என்றார். (ச)




### தரிப்பிட அனுமதியை நடைமுறைப்படுத்தக் கோரி

# வாழைச்சேனை ஓட்டோ சாரதிகள் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்!

வாழைச்சேனை, செப். 14

வாழைச்சேனை எரிபொருள் நிரப்பு நிலையத்தை அண்மித்துள்ள ஓட்டோ தரிப்பிடத்தில் ஓட்டோ தரிப்பதற்கான அனுமதி தொடர்பான தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச சபை முன்றிலில் நேற்று புதன்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வாழைச்சேனை எரிபொருள் நிரப்பு நிலையத்தை அண்மித்துள்ள ஓட்டோ தரிப்பிடம் தொடர்பாகக் கடந்த இரண்டு வருடங்களாகத் தமிழ் மற்றும் முஸ்லிம் ஓட்டோ சாரதிகளுக்கு இடையில் பிரச்சினைகள் நடைபெற்று வருகின்றன.

கறுவாக்கேணி கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட இந்தப் பகுதியில் 15 பேருக்கு ஓட்டோ தரிப்பதற்கான அனுமதி ஆரம்பத்தில் வழங்கப்பட்டது.

பின்னர் முஸ்லிம் பகுதியில் தரிப்பிடம் வழங்கப்பட்டிருந்த 6 பேர் அங்கிருந்து பிரிந்து வந்தனர். அவர்களுக்கும் சேர்த்து 21 பேருக்கும் மேற்படி இடத்தில் வாழைச்சேனைக் கோறளைப் பற்றுப் பிரதேச சபையால் அனுமதி வழங்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு கோரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தெரியப்படுத்தப்பட்டது. இதனை அடுத்து, கடந்த ஜூலை மாதம் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், கூட்டம் நடைபெற்று இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் தீர்மானம் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. இதனைக் கண்டித்தே மேற்படி போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

போராட்டத்தின் இறுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன், ஐக்கிய தேசியக் கட்சி கல்குடாத் தொகுதி அமைப்பாளர் ஆறுமுகம் ஜெகன், வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச சபை செயலாளர் எம்.எஸ். சிஹாப்தீன் ஆகியோரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை போராட்டக்காரர்கள் கையளித்தனர். (ச)








சம்மாந்துறை - ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலய வருடாந்த பாற்குடபவனி நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

இந்தப் பாற்குடபவனி ஸ்ரீ கோரக்கர் விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் பாற்குடத்தை ஏந்தி பவனி வந்தமையைப் படங்களில் காணலாம். (ச)

# வாழைச்சேனையில் மரக் கடத்தல்: பொலிஸாரால் முற்றுகை!



வாழைச்சேனை, செப். 14

வாழைச்சேனை கறுவாக்கேணியில் மீன் ஏற்றும் குளிரூட்டப்பட்ட வாகனத்தில், மறைத்து ஏற்றிவரப்பட்ட முதிரை மரப் பலகைகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி வாகனத்தில் சட்ட விரோதமான முறையில் மரங்கள் கடத்தப்படுகின்றன என வனவளத் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலை அடுத்தே, இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான பத்து அடி நீளம் கொண்ட 150 முதிரை பலகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச)

# காணாமற்போனோர் பணியகத்தைச் செயற்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலில் ஒப்பமிட்டார் ஜனாதிபதி!

கொழும்பு, செப்.14

காணாமற்போனோர் பணியகத்தை செயற்படுத்துவதற்கான சிறப்பு வர்த்தமானி அறிவிப்பை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றிரவு வெளியிட்டுள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கையெழுத்துடன் இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 14ஆம் இலக்க காணாமற்போனோர் பணியக சட்டம், 2017ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்துக்கு அமைய, செப்ரெம்பர் 15ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, காணாமற்போனோர் பணியகம் உருவாக்கப்பட்டு, அதன் செயற்பாடுகள், கடமைகள், ஆணை என்பன செப்ரெம்பர் 15ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரவுள்ளன.



ஜெனீவாவில் திங்களன்று தொடங்கிய ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 36ஆவது கூட்டத்தொடரில், உரையாற்றிய ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன், காணாமற்போனோர் பணியகத்தை உடனடியாகச் செயற்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியிருந்தார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை வெளியாகி, 24 மணிநேரத்தில், இலங்கை ஜனாதிபதி காணாமற்போனோர் பணியகத்தை செயற்படுத்தும் ஆணையில் கையெழுத்திட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## 'நீர்க்காகம்' படைக் கூட்டுப் பயிற்சியை ஜனாதிபதி இன்று பார்வையிடுகின்றார்

கொழும்பு, செப்.14

கடற்படை, விமானப்படையுடன் இணைந்து இலங்கை இராணுவம் நடத்தும், 'நீர்க்காகம் பயிற்சி- VIII - 2017' கூட்டுப் போர்ப் பயிற்சியை இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று நேரில் பார்வையிடவுள்ளார்.

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி கடற்கரைப் பகுதியில் நடத்தப்படவுள்ள போர்ப்பயிற்சியை, பார்வையிடுவதற்கு வருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான விஜேவர்த்தன, பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன ஆகியோரும் இந்தக் கூட்டுப் பயிற்சியை பார்வையிடவுள்ளனர்.





13 நாடுகளைச் சேர்ந்த 69 படையினர் மற்றும் அதிகாரிகளும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கின்றனர்.

கடந்த 3ஆம் திகதி மின்னேரியாவில் தொடங்கிய இந்தக் கூட்டுப் பயிற்சி, வரும் 24ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

## ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் அடுத்த மாதம் இலங்கை வருகை

கொழும்பு, செப்.14

உண்மையை ஊக்குவித்தல், நீதி, இழப்பீடு மற்றும் மீளநிகழாமையை உறுதிப்படுத்துவதற்கான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர், பப்லோ டி கிரெய்ப் அடுத்தமாதம் இலங்கைக்கு மீண்டும் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

ஜெனீவாவில் நடந்து வரும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின், 36 ஆவது கூட்டத்தொடரிலேயே அவர் இதனை அறிவித்தார்.

தமக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்திருப்பதாகவும், வரும் ஒக்ரோபர் 10ஆம் திகதி தொடக்கம், 23ஆம் திகதி வரை அங்கு அதிகாரபூர்வ பயணத்தைத் தாம் மேற்கொள்ளவிருக்கிறார் எனவும் அவர் தெரிவித்தார்.



இலங்கை அரசாங்கத்துக்குத் தொழில்நுட்ப உதவிகள், ஆலோசனைச் சேவைகளை வழங்குவது இவரது கடப்பாடாகும். இவர் ஏற்கனவே கடந்த ஆண்டு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீரற்ற கால நிலையால் மீன் விலை அதிகரிப்பு!

கொழும்பு, செப்.14

தென்னிலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையால் கடல் சீற்றம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மீன்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் மீன்பிடித் தொழில் பாதிப்படைந்துள்ளது என அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தென்னிலங்கையில் இருந்து மீன்களின் வரத்துக் குறைந்துள்ள காரணத்தால் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மீன்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் பிற்பகலில் சல்லடைத் தேடுதல்

## லலித் வீரதுங்க, அனுஷபல்பிட்ட அங்கு சேர்க்கப்பட்டதும் பாய்ச்சல்

கொழும்பு,செப்.14

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அனுஷ பல்பிட்ட ஆகியோர் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 3 மணிவரை மருத்துவமனையில் திடீர் தேடுதல் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மருத்துவமனை பகுதிகள் அனைத்தும் சல்லடை போட்டுத் தேடப்பட்டன.

பல்வேறு முறைகேடுகளும் இடம்பெறுகின்றன எனக் கிடைத்த தகவலை அடுத்து, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் உத்தரவின் பேரில் இந்த திடீர் தேடுதல் நடத்தப்பட்டது எனக் கூறப்பட்டது.

சிறைச்சாலை புலனாய்வு அதிகாரிகளால் நடத்தப்பட்ட இந்தத் தேடுதலின் போது இரண்டு கைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றில் ஒன்று சிறைச்சாலை மருத்துவமனைச் சுவர் ஒன்றுக்கு அருகே வீசப்பட்ட நிலையில் கிடந்தது. இன்னொன்று மருத்துவமனை மேசை ஒன்றின் கீழ் மறைத்து



வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

சிறைச்சாலைக்குள் கைபேசி கொண்டுசெல்லப்படுவதற்கு சாத்தியமில்லை என்றும், சிறைஅதிகாரிகளின் உதவியுடனேயே இவை கைதிகளுக்கு கிடைத்திருக்க வேண்டும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அனைத்து அரசியல் கைதிகள் மற்றும் கைதிகளிடம் இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும் கைதிகளும், பொய்க்காரணம் கூறி சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்ந்துக் கொள்வதால், இனிமேல் 3 மருத்துவ அதிகாரிகள் பரிசோதித்து, பரிந்துரை செய்தால் மட்டுமே மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவர் என்ற புதிய நடைமுறை அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

60 கோடி ரூபா அரச நிதித் துஷ்பிரயோக வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள லலித் வீரதுங்க, அனுஷ பல்பிட்ட ஆகியோர் சிறைக்கு வந்த உடனேயே சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதால் ஏற்பட்ட சர்ச்சைகளை அடுத்து, இலங்கை அரசு சிறைச்சாலை மருத்துவ மனை நடைமுறைகளை கடுமையாக்கி வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## மின் தடை பற்றிய அறிவித்தல்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளி காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்**-

அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் -

சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ் பிரதேசத்தில்**-

மானிப்பாய் ஒரு பகுதி, கரம்பைக்குறிச்சி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் கோணாவில், யுனியன் குளம், கன்னிகாபுரம், ஸ்கந்தபுரம், விநாயகர் குடியிருப்பு, அக்கராயன் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்**- வேளாங்குளம், மடுக்குளம், வேளாங்குளம் விமானப்படை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## தினசரி ராசி பலன் 14.09.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 29 ஆம் நாள்நவமித்திதி இரவு 08.36 மணி வரை. பின்னர் தசமி. நட்சத்திரம் திருவாதிரை பி.இ 3.55 மணி வரை. பின்னர் புனர்பூசம். மரணயோகம் பி.இ. 03.55 மணி வரை பின்னர் சுபயோகம். ராகுகாலம் மாலை 1.37 மணி முதல் 3.08 மணி வரை. சுபநேரம் பகல் 7.02 மணி முதல் 9.02 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி. ஆவணி மாத தேய்பிறை நவமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: திருவாதிரை**

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. பண வரவு சுமாராக இருக்கும். தேவையற்ற வீண் செலவுகள் ஏற்படும். தேக நலன் பாதிப்புறும். தொழில் விசயமாக அலைச்சல்கள் தொடர்ந்திருக்கும். ஓரிரு வம்பில் மாட்டிக் கொள்ள இடமுண்டு.

**ரிஷபம் :** இன்பமான நாள். மனதுக்கு இனிமையான செய்திகள் கிடைத்துக் கொண்டே இருக்கும். சொத்து விஷயமாக நல்ல செய்தி கிடைக்கும். குடும்பத்தில் சுப காரிய நிகழ்வு நடக்கும்

**மிதுனம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பண விடயத்தில் மன நிறைவு, போதுமான வரும் படியும் வந்து கொண்டிருக்கும். வியாபாரத்தில் கணிசமான லாபம் கிடைக்கும்.

**கடகம் :** யோசனையான நாள். தன வரவு குறையும். செய்யும் தொழிலில் தேக்க நிலை உண்டாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும்.

**சிம்மம்:** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். புத்திசாலித்தனமாகச் செயற்படுவதால் குடும்பத்தில் பெரும் புகழும் செல்வாக்கும் அதிகமாகும்.

**கன்னி:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பண வருவாய் சுமாராக இருக்கும். வேலை விஷயத்தில் கூடுதல் பொறுப்பு வரும். குடும்பத்தில் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.

**துலாம் :** மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். மனதில் உற்சாகம் தலை தூக்கி நிற்கும். வெளியூர் பயணம் ஆன்மீகப் பயணம் உண்டாகும்.

**விருச்சிகம் :** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் சம்பந்தமான அலைச்சல் அதிகமாகும். வேலை தேடி அலைவார்கள். சிலர்தேகக் குறைவால் மருத்துவ உதவியை நாடுவார்கள்.

**தனுசு :** சமபலன்கள் காணப்படுகின்றன. வியாபாரத்தில் மந்த நிலை நீடிக்கும். தனவரவு சுமாராக இருக்கும். தொழிலில் பிரயாசை அதிகரிக்கும். உடல் நலம் பாதிப்புறும்.

**மகரம் :** யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். வெளிநாட்டு உறவினர் வரவால் நன்மைகள் உண்டாகும். அசையாச் சொத்துக்கள் வந்து சேர வாய்ப்பு உண்டு.

**கும்பம் :** மேன்மையான நாள். பணம் பல்வேறு வழிகளில் வருவதால் குடும்பச் செலவுகள் குறைவில்லாமல் ஓடும். திருமண காரியங்கள் எளிதில் ஒப்பேறும்.

**மீனம் :** சலனம் மிகுந்த நாள். பணப்பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். வேலைப்பளு அதிகரிக்கும்.

**சந்திராட்டமநாள்: விசாகம் 4 ஆம் கால், அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

# எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் முடிந்தால் தனித்துப் போட்டியிடுக!

## மலையக கட்சிகளுக்கு சவால் விடுக்கிறார் ஆறுமுகன் தொண்டமான்



எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தனித்து நின்று போட்டியிடும் சவாலை மலையக கட்சிகளுக்கு விடுக்கின்றேன். நானும் இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டுபோட்டியிடத் தயாராக உள்ளேன்.

-இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

மஸ்கெலியா பெயார்லோன் தோட்டத்தில் சுமார் 30 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சனசமூக நிலையத் திறப்பு விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் மலையகக் கட்சிகள் அவரவர் சின்னத்தில் தனித்து நின்று போட்டியிட வேண்டும். அப்போதுதான் மலையக மக்களின் ஆதரவு யார் பக்கம் இருக்கிறது எனத் தெரியவரும். அவரவர் தத்தமது கட்சிகளில் போட்டியிடுவார்களேயானால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சேவல் சின்னத்தில் போட்டியிடும்.

மலையக மக்கள் யார் பக்கம் என்பதை எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் உணர்த்தும். மலையக மக்களுடைய அன்பும், பாசமும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சிக்கு நிறைந்துள்ளது. பலப்பரீட்சை வந்ததால் தனியாக நின்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் செல்வாக்கைக் காட்டும்.

மலையக மக்களை பாதுகாக்கின்றமையே தொண்டமான் ஐயாவின் கனவாகும். அந்தவகையில் எமது கட்சி இந்திய வம்சாவளி மக்களைத் தொடர்ந்தும் பாதுகாக்கும். அது எமது கடமை. கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் அலை ஒன்று அடித்தது. அது சுனாமியாக மாறி அவ்வாறாகவே சென்று விட்டது. -என்றார். (ச)

# புதிய மாணவர் அனுமதியில் முறைகேடு: கம்பஹா பகுதியில் 2 அதிபர்கள் சிக்கினர்!

## ஒருவர் பதவி நீக்கம்

கம்பஹா பிரதேசத்தில் புதிய மாணவர் அனுமதியின் போது முறைகேடு செய்த குற்றச்சாட்டில் 2 அதிபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களில் பிரதி அதிபர் ஒருவர் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டுக்கான முதலாம் தர மாணவர்களை அனுமதிக்கும் போதே மேற்படி பிரதி அதிபர், இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது என மேல் மாகாண கல்விச் செயலாளர் காமினி விஜயபந்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அக்குரஸ்ஸ தெலிஜ்ஜிவெல பிரதேசத்தில் பாடசாலையில் கடமையாற்றும் அதிபர் ஒருவர் நேற்றுமுன்தினம் லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பாடசாலையில் மாணவி ஒருவரை சேர்க்கும் போது 10 ஆயிரம் ரூபா பணம் பெற்ற விவகாரத்திலேயே கைது செய்யப்பட்டார் என லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைப் பணிப்பாளர் பிரியந்த சந்திரசிறி தெரிவித்துள்ளார். (ச)

## 4 கோடி ரூபா பெறுமதியான

# தங்கத்துடன் இரு பெண்கள் விமான நிலையத்தில் கைது!




4 கோடி ரூபா பெறுமதியான 7.8 கிலோ கிராம் தங்க நகைகளை இலங்கைக்கு கடத்தி வர முற்பட்ட இரண்டு பெண்களைக் கட்டுநாயக்க விமான நிலைச் சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் இலங்கையர்கள் ஆவர்.

இந்தப் பெண்கள் இருவரும் தங்க நகைகளை இடுப்புப்பட்டிகளுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்தனர் என சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச)

## வாகன விபத்தில் ஒருவர் சாவு!



காலி - கொழும்பு பிரதான வீதியின் இந்துருவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகனவிபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் சென்று கொண்டிருந்த பிரஷ்தாப நபர் மீது மோதிய மையாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

# செயற்றிறன் மிக்க மாற்றுத் தலைமை சாத்தியமா?

யுத்தத்திற்குப் பிந்திய காலப் பகுதியில் தமிழ் அரசியல் செயற்பாடுகளில் மக்கள் எதிர்பார்த்த அளவிற்கு முன்னேற்றம் காணப்படவில்லை. முன்னேற்றத்திற்குப் பதிலாக பின்னடைவே ஏற்பட்டிருக்கின்றது என்பதே சரியான மதிப்பீடாக இருக்கும். அது மட்டுமல்லாமல், தமிழ் மக்களுக்கான வலுவானதோர் அரசியல் தலைமையும் அமையவில்லை என்பதையும் யுத்தத்திற்குப் பிந்திய காலப்பகுதி வெளிப்படுத்தியிருக்கின்றது.

இராணுவ சக்தி சார்ந்த நிலையில் தமிழ் மக்களின் அரசியல் தலைமையை விடுதலைப் புலிகளின் பொறுப்பில் இருந்த வேளை, அரசாங்கத்துடன் சமநிலைத் தன்மை காணப்பட்டது. சம அந்தஸ்துடனேயே, விடுதலைப்புலிகளுக்கும் அரச தரப்பினருக்கும் இடையிலான பேச்சு இடம்பெற்றிருந்தன. துரதிஷ்டவசமாக விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டமையைத் தொடர்ந்து அரசியல் நிலைப்பாட்டில் தோல்விகண்ட ஒரு நிலைமைக்கே தமிழர் தரப்பு தள்ளப்பட்டிருந்தது.

யுத்தத்தில் வெற்றிபெற்றிருந்த மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், தமிழ் மக்களுடைய அரசியல் தலைமையாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசியல் ரீதியாகச் சமநிலையில் மட்டுமல்ல, பொறுப்பான ஒரு நிலையிலும் கூடத் தொடர்புகளைப் பேணியிருக்கவில்லை.

இந்தியாவின் அழுத்தம் காரண



மாக, அரசியல் தீர்வுக்கான பேச்சுகளை அரசாங்கம் முன்னெடுத்திருந்த போதிலும், அந்தப் பேச்சு ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகவே மேற்கொள்ளப்பட்டிருந்தன. அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என வெளியாருக்குக் காட்டுவதற்காக மட்டுமே அந்தப் பேச்சுகள் நடத்தப்பட்டன. ஏனெனில் அந்தப் பேச்சுக்களின் போது எட்டப்பட்ட முடிவுகள் அல்லது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

**அரசுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை**

அரச தரப்பால் பேச்சுகள் இழுத்தடிக்கப்பட்டன. தமிழ்த்தேசிய கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட விடயங்களை உரிய முறையில் ஆராய்ந்து அதற்கான முடிவுகளை எட்டுவதற்குப் பதிலாகத் தமிழர் தரப்பை ஏமாற்றுவதற்கான முயற்சிகளிலேயே அரசாங்கத் தரப்பில் கலந்துகொண்டிருந்த பிரதிநிதிகள் கண்ணும் கருத்துமாக இருந்தனர். இறுதியில் பேச்சுகளைப் புறந்தள்ளிய அரசாங்கம், ஒரு வருட காலம் நடைபெற்ற பேச்சுகள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகள்



அல்ல. அவை தனிப்பட்ட முறையில் சட்டரீதியாக இடம்பெற்ற பேச்சுகள். எனவே, அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற குண்டைத்தூக்கிப்போட்டு, அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை முடிவுக்குக் கொண்டு வந்திருந்தது.

அரசியல் நட்பு ரீதியான ஓர் இணக்கப்பாட்டுடன் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதில் பெரும்பங்கு வகித்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் என்ற நம்பிக்கையிலேயே இரண்டரை வருடகாலத்தைப் போக்கியிருக்கின்றது.

தமிழ் மக்களுடைய அன்றாட எரியும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் விருப்பமற்றவராகவே இருந்தார். அதேபோன்று புதிய அரசமைப்பின் மூலம், இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையைத் தமிழ் மக்களுக்கு ஊட்டிவந்தாரேயல்லாமல், அதற்குரிய அரசியல் ரீதியான அழுத்தத்தை அரசாங்கத்தின் மீது அவர் பிரயோகிக்கவே இல்லை.

**எதிர்பார்த்தவாறு தீர்வு கிட்டவில்லை**

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்று அரசாங்கத்திற்குத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அழுத்தம் கொடுத்தால், அது, எதேச்சதிகார ஆட்சி நடத்தி தமிழ் மக்களுக்குப் பேரிடர் விளைவித்



திருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு வழியேற்படுத்திவிடும் என்று தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான அச்சத்தை ஏற்படுத்தியிருந்தார்.

எனவே, நல்லாட்சி அரசாங்கம் 2016 ஆம் ஆண்டு இறுதிக்குள் அரசியல் தீர்வு காணும். அதுவரையில் அமைதிகாக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தி வந்தார்.

நல்லாட்சி அரசாங்கத்துடன் நிபந்தனையுடன் கூடிய ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணங்கிச் செயற்பட வேண்டும் என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தெரிவித்த ஆலோச



னையை சம்பந்தன் ஏற்றுக்கொள்ளவில்லை. அரசியல் ரீதியான புரிந்துணர்வு, அரசியல் ரீதியான பரஸ்பர நம்பிக்கை என்பவற்றின் அடிப்படையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோருடன் கொண்டுள்ள அரசியல் உறவே போதும், அந்த உறவின் ஊடாக பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்றும் அவர் வலியுறுத்தி வந்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் மூலம் இராணுவம் கைப்பற்றி நிலைகொண்டுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படும், சிறைச்சாலைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குப் பொறுப்பு கூறப்படும், இரகசியமாக ஆள்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்கள் பற்றிய விவரங்கள் வெளிப்படுத்தப்படுவதுடன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலான பெயர்ப்பட்டியல் வெளியிடப்படும், வடக்கில் தேவைக்கு அதிகமாக நிலைநிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தின் எண்ணிக்கை கணிசமான அளவில் குறைக்கப்பட்டு சிவில் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கப்படும், ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்பன போன்ற நிறைவேற்றப்பட்டிருக்கக் கூடிய பிரச்சினைகளுக்குக்கூட தீர்வு காணப்படவில்லை.

அத்துடன், 2016 ஆம் ஆண்டுக்குள் அரசியல் தீர்வு காணப்படும் என்ற எதிர்பார்ப்பும் நிறைவேறவில்லை. மாறாக, 2016 ஆம் ஆண்டு முடிவடைந்து 2017 ஆம் ஆண்டு முடிவடையும் தறுவாயிலும்கூட அரசியல் தீர்வு கிடைக்குமா என்பது சந்தேகத்திற்குரியதாகவே இருக்கின்றது.

**சர்வதேசத்தின் நிரலிலேயே நிகழ்வுகள்**

பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் அரசாங்கத்துடன் நெருங்கிச் செயற்பட்ட போதிலும் அந்த இணக்க அரசியலின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுடைய தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. ஐ.நாவுக்கும் சர்வதேசத் திற்கும் அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளின்படி போர்க்கால உரிமை மீறல் விடயங்களில் பொறுப்பு கூறுவதற்கும், நிலைமாறு கால நீதியை நிலைநாட்டி, நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் நம்பிக்கையூட்டத்தக்க நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லை.

**செல்வரட்ணம் சிறிதரன்**

இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அரசாங்கத் தரப்பிடம் விலைபோய்விட்டதோ என்று எண்ணத்தூண்டும் அளவுக்கு நிலைமைகள் மோசமாகின.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக சர்வதேசத்துடன் இராஜதந்திர ரீதியாகத் தொடர்புகொண்டு, அதன் ஆதரவைப் பெற்று, காய் நகர்த்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் கூறப்பட்டதேயொழிய, அந்த இராஜதந்திரத் தொடர்புகளின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குரிய வகையில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதைக் காண முடியவில்லை.

முன்னைய அரசாங்கத்தைப் போலல்லாமல், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் இலங்கை தொடர்பான பிரேரணைக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் இணை அனுசரணை பெறப்பட்டிருந்த போதிலும், குறித்த காலக்கெடுவுக்குள் செய்து முடிக்கப்படவேண்டிய காரியங்கள் அரசாங்கத்தால் செய்து முடிக்கப்படவில்லை. அழுத்தம் கொடுக்க முடியவில்லை. மாறாக, சர்வதேசத்தின் பிராந்திய அரசியல் ரீதியான நலன்களின் அடிப்படையில். ஐ.நா. பிரேரணையில் கூறப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கு, கூட்டமைப்பின் ஒப்புதலுடன் அரசாங்கத்திற்கு மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கின்றது.

**தலைமை தவறிவிட்டது**

ஏனைய பங்காளிக்கட்சிகளுடன் முற்கூட்டியே கலந்தாலோசிக்காமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இதற்கான ஒப்புதலை வழங்கியிருந்தார். இந்த விடயம் அமெரிக்க தூதுவரின் கூற்றுக்கு ஊடாகவே வெளியில் கசிந்திருந்தது.

(13 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர்
Kalaikkathir



தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”

290

**கொழும்பில் அண்மையில் நடந்த இந்தியப் பெருங்கடல் மாநாடு**

கொழும்பில் அண்மையில் நடந்த இந்தியப் பெருங்கடல் மாநாட்டின் (IOC) விளம்பரப்படுத்தப்பட்ட கருப்பொருள் ''சமாதானம், முன்னேற்றம் மற்றும் சுபீட்சம்'' ஆகும். ஆனால், இந்த இரண்டு நாள் நிகழ்வுக்கும் அத்தகைய அபிலாஷைகளுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. வொஷிங்டனும் புதுடில்லியும் இந்த பிராந்தியத்தில் கடற்படை நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும் மூலோபாய நலன்களை வலியுறுத்துவதற்குமான தமது திட்டங்களை வெளிப்படுத்துவதற்காக இந்த நிகழ்வை பயன்படுத்திக்கொண்டன. அவர்கள் சீனாவைப் பெயர்க் குறிக்கா விட்டாலும், இந்த இராணுவ கட்டியெ முழுப்பலின் இலக்கு அதுவே.



சிங்கப்பூரின் சர்வதேச கற்கைகளுக்கான ராஜராட்ணம் பள்ளி மற்றும் ஒரு கொழும்பு ஆராய்ச்சி மையமான அடிப்படைக் கல்விகளுக்கான தேசிய நிறுவனத்துடனும் இணைந்து, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு நெருக்கமான சிந்தனைக் குழாமான



இந்திய அறக்கட்டளையால் இந்த மாநாடு நடத்தப்பட்டது.

பிரதான அமெரிக்க பேச்சாளர், தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகார பதில் துணை வெளிவிவகாரச் செயலாளர் அலிஸ் வெல்ஸ் ஆவார். வெளியுறவு அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் இந்தியப் பிரதிநிதிகள் குழுவுக்கு தலைமை தாங்கினர். ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன், ஜப்பான், இந்தோனேசியா, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், சிங்கப்பூர், சீஷெல்ஸ், மொரிஷியஸ், மலேசியா மற்றும் வியட்நாம் உட்பட சுமார் 35 நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சீனா மற்றும் பாக்கிஸ்தானும் குறைந்த பிரதிநிதிகளை அனுப்பின.

ஒருபுறம் அமெரிக்காவும் இந்தியாவும், மறு புறம் சீனாவும் ஏனைய நாடுகளுக்கும் இடையே பூகோள-அரசியல் பதற்றங்கள் அதிகரித்து வருவதன் பின்னணியிலே இந்த நிகழ்வு இடம்பெற்றது.

**மோடி அரசு இந்தியாவை ஒரு ''முன்னிலை அரசாக'' மாற்றிக்கொண்டிருக்கிறது.**

ட்ரம்ப் நிர்வாகமானது வட கொரியாவின் அணுசக்தி சோதனைகளை இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள அச்சுறுத்துவதற்கும் மேலும் பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கும் மற்றும் தென் கொரியாவில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும் பயன்படுத்துகிறது. சீனா மற்றும் ரஷ்யாவை வடகொரியாவிற்கு உதவுவதாக வொஷிங்டன் குற்றம்சாட்டுவதானது தனது பூகோள மேலாதிக்கத்தை வலியுறுத்தும் அமெரிக்க முயற்சிகளின் இறுதி இலக்குகள் அவையே என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. ''கடற் போக்குவரத்து சுதந்திரத்தை'' பாதுகாக்கும் போலியான சாக்குப்போக்குடன், தென் சீனக் கடலுக்கு பென்டகன் கடற்படை போர்க்கப்பல்களை அனுப்பிக் கொண்டு, பெய்ஜிங்கின் பிராந்திய உரிமை கோரல்களை சவால் செய்வதுடன் அணு ஆயுதப் போரை விளைவிக்கும் ஆபத்தான பதற்றங்களை தூண்டிவிடுகிறது.

இந்தியாவும் சீனாவும் பரஸ்பர எல்லைகளில் நீண்ட காலமாக பிராந்திய பூசல்களை கொண்டுள்ளதுடன் வளங்கள் மற்றும் சந்தைகளுக்கான போராட்டத்தில் போட்டியாளர்களாக உள்ளன. சீனாவிற்கு எதிரான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போர் உந்துதலின் ஒரு பகுதியாக, மோடி அரசாங்கம் இந்தியாவை ஒரு ''முன்னிலை அரசாக'' மாற்றிக்கொண்டிருக்கிறது.

ஆண்டுதோறும் உலக கொள்கலன் கப்பல் போக்குவரத்தில் அரைப் பகுதியும், மொத்த சரக்கு போக்குவரத்தில் மூன்றில் ஒரு பகுதியும், எண்ணெய் ஏற்றுமதிகளில் மூன்றில் இரண்டு பங்கும் இந்தியப் பெருங்கடலின் வழியாவே இடம்பெறுகின்றன. சீனாவிற்கு இந்த வழிகள் இன்றியமையாதவை. எரிசக்தி உட்பட அதன் மூலப்பொருள்களின் பெரும்பகுதி ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. சீனாவுடன் இராணுவ மோதல் ஏற்பட்டால், அமெரிக்க மற்றும் இந்திய கடற்படை, சீன கப்பல்களை தடுக்க முயற்சிக்கும்.

இப்பிராந்தியத்தில் வொஷிங்டனின் மூலோபாய நலன்களை வலியுறுத்துகையில் வெல்ஸ் பிரகடனம் செய்ததாவது: ''அமெரிக்காவானது ஓர் இந்து-பசுபிக் சக்தியாகும் -தொடர்ந்தும் அப்படி இருக்கும்''.



இந்திய பெருங்கடலில் ''பாதுகாப்பு அச்சுறுத்தல்களை'' எதிர்த்து நிற்பதற்கும், ''கடற் போக்குவரத்து சுதந்திரம் உட்பட சர்வதேச தரங்களை ஆதரிக்கவும்'' ''இந்திய பெருங்கடலுக்கான பொதுவான நோக்கை'' அமைக்க அவர் அழைப்பு விடுத்தார்.

சர்வதேச தரநிலைகள், கடற் போக்குவரத்து சுதந்திரம், விதிகள் அடிப்படையிலான அமைப்புக்கள் போன்ற சொற்றொடர்கள், சீனாவிற்கு எதிராக வொஷிங்டனால் பயன்படுத்தப்படும் பாசாங்குத்தனமான மந்திரங்கள் ஆகும்.

**இலங்கைக் கடற்படையின் புதிய தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா, ''கடற் போக்குவரத்து சுதந்திரத்திற்கு'' தனது அர்ப்பணிப்பை அறிவித்தார். இலங்கை கடற்படையின் எதிர்கால பாத்திரம், ''ஏடன் வளைகுடா மற்றும் மலாக்கா ஜலசந்திக்கும் இடையில் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை பாதுகாப்பதே,'' என அவர் அறிவித்தார்.**



அமெரிக்காவால் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி, ஜூலை மாதத்தில் அமெரிக்க-இந்தியா-ஜப்பான் நடத்திய மலபார் கடற்படைப் பயிற்சியை பற்றி பிரதிநிதிகளுக்கு நினைவுபடுத்திய வெல்ஸ், ''பத்தாயிரம் சிப்பாய்களுக்கும் மேல் பங்குபற்றிய இற்றைக்கு மிகப்பெரிய மற்றும் மிக ஒருங்கிணைந்த'' பயிற்சியாக அதை சித்திரித்தார். கூட்டுத் திறனைக் கட்டியெழுப்புதல் மற்றும் பயிற்சிகளும், மேலும் மேலும் சிக்கலானதாகி வரும் இந்த பிராந்தியத்தில் பாதுகாப்பு சுமையை பகிர்ந்து கொள்ள உதவும்'' என அவர் மாநாட்டில் தெரிவித்தார்.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான புதிய கடற்படைக்கும்-கடற்படைக்குமான உறவையும் ஒக்ரோபரில் நடத்தவுள்ள இரு நாடுகளுக்கும் இடையிலான ''முதலாவது கடற்படைப் பயிற்சியையும்'' வெல்ஸ் அறிவித்தார். சீனாவிற்கு எதிரான அமெரிக்க போரில் இலங்கையை முழுமையாக ஒருங்கிணைக்கும் வொஷிங்டனின் முயற்சிகளில் இவை சமீபத்தியவை.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்ப மான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக் கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

95




## அத்தியாயம் - VI

## இந்திய – இலங்கை முரண்பாடு

மறுநாள் ஜூன் மாதம் 15 ஆம் திகதி காலை, பிரேமதாசா தமது வதிவிடமான 'சுச்சித்ர'வுக்குத் தனிப்பட்ட கலந்துரையாடலுக்காக எம்மை அழைத்தார். இந்தச் சந்திப்பு ஒன்றரை மணி நேரம் நீடித்தது. இந்திய அமைதிப் படையைத் திருப்பிப்பெறுவது தொடர்பாக, முதல்நாள் பெங்களூரில் ராஜீவ் காந்தி நிபந்தனைகள்விதித்து விடுத்த அறிக்கை பிரேமதாசாவுக்குக் கலக்கத்தைக் கொடுத்திருந்தது. அத்தகைய நிபந்தனைகளை இந்தியா விதிக்கமுடியாது என்று அவர் வாதிட்டார். முந்திய அரசுத் தலைவர் ஜயவர்த்தனா இந்தியப் படைகளை அழைத்தார். தற்போதைய அரசுத் தலைவர் வெளியேறவேண்டும் என்றார்.

இந்த நிலையில், படைகளைத் திருப்பிப் பெறுவதைத் தவிர, இந்திய அரசுக்கு வேறு வழியில்லை என்றும் அவர் வாதிட்டார். தாம் அதிகாரபூர்வமாக அனுப்பிவைத்த கடிதத்துக்கு இதுவரை பதில் அனுப்பாமல், ஏற்கமுடியாத நிபந்தனைகளைப் பகிரங்க அறிக்கை மூலம்ராஜீவ்காந்திவெளியிட்டிருக்கின்றமையை அடுத்து, நாட்டிலே இந்திய இராணுவம் நிரந்தரமாகத் தங்கிவிடுமோ என்ற அச்சமும், குழப்பமும் உருவாகி இருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார். சிறிலங்கா ஆயுதப் படைகளுடன் விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் செய்யவேண்டும் என்று பிரேமதாசா விரிந்துரைத்தார். புலிகள் அப்படிச் செய்யும் பட்சத்தில், ஒப்பந்தத்துக்கு அமைவாக அமைதி நிறுவப்படவேண்டும் என்ற முக்கிய கடப்பாடு நிறைவேற்றப்படுவதால், இந்தியாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான தனது பகைமை நடவடிக்கைகள் அனைத்தையும் முடிவுக்குக் கொண்டுவந்து,தனது படைகளையும்திருப்பி அழைக்கவேண்டும் என்று தாம் வற்புறுத்தக் கூடுமாக இருக்கும் என்றும் பிரேமதாசா கூறினார்.

விடுதலைப்புலிப்பிரதிநிதிகளுக்கும் சிறிலங்கா அமைச்சரவை அணிக்கும் இடையே ஜூன் மாதம் 16 ஆம், 19 ஆம் திகதிகளில் 2 ஆவது சுற்றுப் பேச்சின் முதல் இரண்டு அமர்வுகளும் இடம்பெற்றன. அங்கு முதன்மை பெற்ற விடயங்களில், படைகளைத் திருப்பிப் பெறுவது தொடர்பாக சிறிலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே உருப்பெருத்துவரும் இராஜதந்திர மோதல் ஒன்றாகும். சிவிலியன் தொண்டர்படை என்ற பெயரில் அமைக்கப்படும் தமிழ்த் தேசிய இராணுவத்துக்கு, தமிழ் இளைஞர்கள், குறிப்பாக மாணவர்கள் நிர்ப்பந்த அடிப்படையில் சேர்க்கப்படுகின்றமை இந்த அமர்வுகளில் விவாதிக்கப்பட்ட இன்னொரு விடயமாகும். இந்தப் பேச்சுக்களில் அரச அணியில் இரண்டு புதிய அமைச்சர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். மின்சக்தி அமைச்சர் பொஸ்டஸ் பெரேரா ஒருவர், வர்த்தகம் மற்றும் கப்பல்துறை அமைச்சர் மன்சூர் மற்றவர். முதல் அமர்வின்போது, சிறிலங்கா அணியின் தலைவர் என்ற முறையில் ஹமீது இந்தியாவுக்கும்இலங்கைக்கும்இடையே உருவாகி வரும் இராஜதந்திர முரண்பாடுகள் தொடர்பானபுதிய விவரங்களை விளக்கிக் கூறினார். வடக்கு, கிழக்கிலே போரும், தெற்கிலே கிளர்ச்சியும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றமைக்குக் காரணம் சிறிலங்கா மண்ணிலே இந்தியப் படையின் பிரசன்னமே என்று பிரேமதாசா உறுதியாக நம்புகின்றமையாலேயே இந்திய அமைதிப்படை திருப்பி அழைக்கப்படவேண்டும் என்று அரசுத் தலைவர் வலியுறுத்துகின்றார் என ஹமீது தமது பகுப்பாய்வை முன்வைத்தார். ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது. சிறிலங்காவின் அரசியல் நிலை முற்றாக மாறிவிட்டது; போரில் ஈடுபட்டிருந்த இரண்டு தரப்பினரும், அதாவது புலிகளும் சிறிலங்காவும், அரசியல் தீர்வு காண்பதற்காக அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள்; இந்த நிலையில் இந்திய அமைதிப் படையின் தேவையே அற்றுப்போய் விட்டது என்று ஹமீது விளக்கினார். சார்க் உச்சி மாநாட்டை நவம்பரில் கூட்ட பிரேமதாசா விரும்பியமையால், ஜூலை மாத முடிவளவில் இந்திய அமைதிப் படையை வேகமாகத் திருப்பி அழைக்கவேண்டும் என்று பிரேமதாசா கோரினார். இந்தக் கோரிக்கை இந்தியாவுக்குப் பெரும் பிரச்சினைகளைத் தோற்றுவித்து விட்டது எனக் ஹமீது கூறினார்.

ஆயிரமாயிரம் படையினரையும் போர்த் தளவாடங்களையும் இரண்டு மாதங்களுக்குள் திருப்பி அழைப்பது, இராணுவ ஒழுங்கு முறையில் காரிய சாத்தியம் அற்றது என்றும் ஹமீது சுட்டிக் காட்டினார். இந்தியா முன் நிபந்தனைகளை விதித்துக்கொண்டிருக்கின்றது. படைகளைத் திருப்பி அழைக்கின்றமையால் ஏற்படப்போகும் அவமானத்தைத் தவிர்க்கவே இந்தியா அவ்வாறு செய்கின்றது; படைகள் திரும்பிச் சென்றால் டிசெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் தேர்தலில் ராஜீவின் வெற்றி வாய்ப்பு வெகுவாகப் பாதிக்கப்பட்டுவிடும் என்ற அச்சமே அதற்குக் காரணம் என்றும் ஹமீது விளக்கிக் கூறினார்.

அந்த வேளைய நிலைவரம் பற்றி விடுதலைப் புலிப் பிரதிநிதிகளின் கருத்தை அறியவும் ஹமீது ஆர்வம் தெரிவித்தார். கள நிலைவரக் கருத்தை விடுதலைப்புலிகள்ஏற்றுக்கொண்டமையோடு, ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் மாகாண நிர்வாக எதிர்காலம் தொடர்பாக ராஜீவ் நிர்வாகம் அக்கறை கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஒரேயோர் எச்சசொச்சமாக விளங்கும் வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாகம், இந்திய அமைதிப்படை நாட்டை விட்டு அகன்றமறுகணமே பொலபொலவென்று விழுந்து ஒழிந்துவிடும் என்று அவர்கள் கூறினார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் ஊசலாட்டமான நிர்வாகத்தைக் காப்பாற்றும் பலமான துணைப்படை ஒன்று நிறுவப்படும் வரைக்கும் இந்திய அமைதிப் படையை தொடர்ந்து வைத்திருக்க ராஜீவ் விரும்புகின்றார் என அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஜூன் மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வின்போது, ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் துணைப்படை தொடர்பாகவும், விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா பாதுகாப்புப் படைகளுக்கும் இடையிலான போர் நிறுத்தம் தொடர்பாகவுமே விரிவாக ஆராயப்பட்டது. இந்திய இராணுவ அதிகாரிகள் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் மாகாண நிர்வாகத்தோடு சேர்ந்து தொண்டர் படைக்காக பிரமாண்டமான அளவில் தமிழ் இளைஞர்களைச் சேர்க்க முற்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என முறையிட்டார்கள். இந்த அமர்வு நடைபெறுவதற்கு ஒரு வாரம் முன்னதாக, 4 ஆயிரத்து 500 இளைஞர்கள், அதுவும் பெரும்பாலும் பள்ளிசெல்லும் இளைஞர்கள், ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் ஆயுத பாணிகளால் சுற்றிவளைக்கப்பட்டு, கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் உள்ள வெவ்வேறு இந்திய இராணுவப் பாசறைகளுக்குப் பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டார்கள். இது தமிழ்ப் பகுதிகளில் ஒரு பிரச்சினையாகியது. தங்கள் பிள்ளைகளை விடுவிக்குமாறு ஆயிரக் கணக்கான பெற்றோர்கள் இந்திய இராணுவப் பாசறைகளின் வாயிலில் தவிப்போடு கெஞ்சினார்கள். இந்த விடயத்தில் சிறி லங்கா அரசின் நிலைப்பாடு என்ன என்று புலிகள் கேள்வி எழுப்பினார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாகத்துக்கென ஆயுதப் படை ஒன்றை நிறுவ ஒப்பந்த விதிகளில் இடம் கிடையாது என்பதை அமைச்சரவை அணி ஒப்புக்கொண்டது. அரசுத் தலைவர் இந்த விடயத்தை இந்தியப் பிரதமருடன் விவாதிப்பார் என்று ஹமீது உறுதிமொழி கூறினார்.

சிறிலங்காப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் நிறுத்தம் தொடர்பாக பேச்சு நடந்து கொண்டிருந்தபோது, பகைமை ஒழிப்பை விடுதலைப் புலிகள் முதலில் ஒருதலைப் பட்சமாக வெளியிடவேண்டும் என்றும், பின்னொரு நாளில் சிறிலங்கா அரசு தனது போர் நிறுத்தத்தை அறிவிக்கும் என்றும் அரச அணி கூறியது. ஏற்கெனவே பிரகடனப்படுத்தப்படாத போர் நிறுத்தம் ஒன்று புலிகளுக்கும் அரசபடைகளுக்கும் இடையே நடைமுறையில் இருப்பதை விடுதலைப் புலிகளின் அணி சுட்டிக்காட்டியது. இந்த நிலையில், இரண்டு பக்க போர் நிறுத்தத்தை இரு தரப்பினரும் பிரகடனம் செய்வதே சாலச் சிறந்தது என்றும் இரு தரப்பினரும் அமைதியைக் கடைப்பிடிப்பதோடு, அரசியல் இணக்கத்துக்கான பேச்சுக்களையும் ஏற்கனவே நடத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்பதும் அனைத்துலக சமூகத்தில் ஒரு நல்லபிப்பிராயத்தை நிறுவும் என்றும் புலிகள் சுட்டிக்காட்டினார்கள்.

இத்தகைய சமூகச் சூழலில், வெளிநாட்டு சக்தி ஒன்று அமைதி காக்கும் இராணுவத்தை வைத்திருக்கவேண்டிய தேவை இல்லை என்றும் புலிகள் கருதினார்கள். இந்த விடயம் தொடர்பாக அரசுத் தலைவருடன் தாம் கலந்தாலோசிப்பர் என்றும் அமைச்சர்கள் கூறினார்கள்.

பிரேமதாசா ஜூன் மாதம் 2 ஆம் திகதி எழுதிய கடிதத்துக்கு ராஜீவ் காந்தி ஜூன் மாதம் 20 ஆம் திகதி பதில் அனுப்பினார். இராஜதந்திர வார்த்தைப் பிரயோக முலாமிட்ட அந்தப் பதிலில், இந்தியப் படைகள் தமது பலத்த இழப்புக்கு மத்தியில், தமிழ்ப் பகுதியில் அமைதியையும் இன ஒத்திசைவையும் நிலைநாட்டுகின்றமையில் பெரும் சாதனை புரிந்திருக்கின்றனர் என காந்தி எழுதியிருந்தார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கான பொறுப்பையும் கடப்பாடுகளையும் சிறிலங்கா ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பிரேமதாசாவுக்கு ராஜீவ் நினைவூட்டினார். இந்திய அமைதிப் படையைத் திரும்பிப் பெறுவது தொடர்பாகவும், ஒப்பந்தத்தை முழுமையாகச் செயற்படுத்துவது தொடர்பாகவும் இரு பக்கமும் ஏற்கக்கூடிய ஓர் ஏற்பாட்டை வகுக்கக் கலந்துரையாடல் ஒன்றை நடத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(தொடரும்...)





## பிரான்ஸில் இடம்பெற்ற
# லெப்.கேணல் பொன்னம்மான் நினைவுக் கிரிக்கெட் போட்டி!



தமிழர் ஒருங்கிணைப்புக்குழு மற்றும் பிரான்ஸ் தமிழர் விளையாட்டுத்துறை ஆகியன இணைந்து நடத்திய லெப்.கேணல் பொன னம்மானின் நினைவு சுமந்த ஐரோப்பிய ரீதியிலான கிரிக்கெட் போட்டி கடந்த ஞாயிற் றுக்கிழமை பிரான்ஸில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஈகச்சுடரை 1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்திய இராணுவத் தினருடன் இடம்பெற்ற நேரடிமோதலில் வீரச்சாவடைந்த கப்டன் பரா மற்றும் 1990 ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த லெப்ரினன்ட் பக்கி ஆகியோரின் சகோதரன் ஏற்றிவைத் தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு விளையாட் டுத்துறைப் பொறுப்பாளர் கிருபா போட்டிகளை ஆரம்பித்துவைத்தார். 20 கிரிக்கெட் அணிகள் இப்போட்டியில் கலந்துகொண்டன.







# கனடா தமிழ் இளையோர் அமைப்பின் வருடாந்த கிளித்தட்டுப் போட்டிகள்!

கனடா தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் கனேடிய தமிழர் விளையாட்டுத்துறை ஆகியன இணைந்து நடத்திய தமிழீழ பாரம் பரியக் கிண்ணத்துக்கான 7 ஆவது வருடாந்த கிளித்தட்டுப் போட்டிகள் ஓகஸ்ட் மாத இறுதியில் ரொறன் ரோவில் நடைபெற்றன.

பாடசாலை மாணவர்கள் முதல் பெரியோர்கள் வரை வயது வேறுபா டின்றி அனைவரும் இந்தப் போட்டி யில் பங்கு பற்றினர்.

கனடாவில் வளர்ந்து வரும் இளம் தமிழ்த் தலைமுறையி னரிடையே தமிழீழ பாரம் பரிய விளையாட்டுகளை ஊக்குவிக்குமுகமாக இந்த நிகழ்வை தமிழ் இளையோர் அமைப்பினர் நடத்தி வரு கின்றனர்.


இதில் பங்குபற்றி விளை யாடும் விளையாடும் அணி களுக்கான பெயர்களும் தமிழர் வரலாறு, மாவீரர் வரலாறுகளை நினை வூட்டுவனவாகவே வழங்கப் பட்டுள்ளன.

அந்தவகையில் கிளி நொச்சி, புலிப்படை, மில்லர், கலையழகன், தமிழ்ச்செல் வன், சூசை, சோழர், கரிகாலன், சிறுத்தை, தீபன், சார்ள்ஸ் அன்ரனி, வானவில், தாயகம், சங்கிலியன் போன்ற அணிகள் இந்தப் போட்டியில் பங்கு பற்றியிருந்தன.

ஆரம்பநிலை அணிகளுக் கான வெற்றிக்கிண்ணத்தை கலையழகன் விளையாட்டு அணி தட்டிக்கொள்ள, சூசை விளையாட்டு அணி இரண் டாம் இடத்தைத் தட்டிக் கொண்டது. அதேபோல், இடைநிலை அணிகளுக்கான வெற்றிக்கிண்ணத்தை தாய கம் விளையாட்டு அணி பெற்றுக்கொள்ள, வானவில் விளையாட்டு அணி இரண் டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இந்தப் போட்டி களில், சிறந்த விளையாட்டு அணிக்கான கிண்ணத்தை கரிகாலன் விளையாட்டு அணி பெற்றுக்கொண்டது. சிறந்த விளையாட்டு வீரருக்கான கிண்ணத்தை கலையழகன் விளையாட்டு அணியிலிருந்து அலெக்சன் பெற்றுக்கொண் டார். சிறந்த காப்பு வீரருக் கான கிண்ணத்தை கலை யழகன் அணியிலிருந்து எஸ்ரா பெற்றுக்கொண்டார். திறமை மிக்க வீரருக்கான கிண்ணத்தை சூசை அணியிலிருந்து அன் ரியாஸ் பெற்றுக்கொண்டார். இதேபோல், கிளித்தட்டுப் போட்டிகளில் சிறந்த 'கிளி' யாக கலையழகன் அணி யிலிருந்து சுரேந்திரன் தெரி வானார்.

# நியூஸிலாந்தில் ஈழத்து யுவதியின் மனிதாபிமானம்!






நியூஸிலாந்தில் வாழும் ஈழத்தைச் சேர்ந்த யுவதி ஒருவ ரின் செயற்பாடு பலரின் வர வேற்பைப் பெற்றுள்ளது. 23 வயதான விதுஜனா விக்னேஸ் வரன் என்ற யுவதி தனது தலை முடியை புற்றுநோயால் பாதிக் கப்பட்டவர்களுக்குத் தானமாக வழங்கியுள்ளார்.

அகதி அந்தஸ்து கோரி நியூ ஸிலாந்தில் குடியேறி உள்ள விது ஜனா கல்லூரியில் படித்து வரு கிறார்.

இந்த நிலையில், தனது நீண்ட தலைமுடியை புற்று நோயால் பாதிக்கப்பட்டவர் களுக் குத் தானமாக வழங்கியுள்ளார்.

சமகாலத்தில் பொறுப்பற்ற ரீதியில் கலாசார சீரழிவில் இளைய தலைமுறை சிக்கி வருகிறது. இவ்வாறான நிலையில் விதுஜனா வின் செயற்பாடு பலருக்கும் முன்மாதிரியாக அமைந்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

# செயற்றிறன் மிக்க...

( 09 ஆம் பக்கத் தொடர்ச்சி... )

அதுவரையில் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சித் தலைவர்களுக்குக் கூட இந்த விடயம் கூட்டமைப்பின் தலைமையால் உரிய முறையில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

மொத்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காக, அரசாங்கத்துடனும், சர்வதேசத்துடனும் பல வழிகளிலும்தீவிரமாகச் செயற்படுவதற்குப் பதிலாகக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள தரப்பு தமிழரசுக்கட்சியின் வளர்ச்சியையும் நலனையும் பேணுவதிலேயே ஆர்வம் காட்டி வருகின்றது எனக் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது.

அதேவேளை, கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்து, அதனைக் கட்டமைத்துச் செயற்படுத்துவதிலும்கூட்டமைப்பின் தலைமை ஆர்வம் காட்டவில்லை என்றும் குறை கூறப்பட்டிருக்கின்றது. அந்தக் குறை இன்னும் தொடர்கின்றது. அது மட்டுமல்லாமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிப் பலத்தைக் கொண்டுள்ள வடமாகாண சபையின் நிர்வாகச் செயற்பாடுகளைச் சீரான முறையில் கட்டமைத்துச் செயற்படுத்துவதிலும் கூட்டமைப்பின் தலைமை தவறிவிட்டது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடமாகாணத்துக்கான முதலமைச்சராக முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனை அரசியலுக்குள் பிரவேசிக்கச் செய்திருந்த போதிலும், அவருடைய தலைமையிலான வடமாகாண சபையை, நிர்வாகத் திறன்மிக்கதொரு சபையாகக் கட்டியெழுப்ப கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனால் முடியாமல் போயிருக்கின்றது. ஏனெனில் முதலமைச்சராக மக்களால் தெரிவு செய்யப்பட்ட விக்னேஸ்வரனும், அதே போன்று வடமாகாணசபை உறுப்பினர்களும் அரசியலுக்குப் புதியவர்கள்; முன் அனுபவமற்றவர்கள். இந்த நிலையில் அவர்கள் உரிய முறையில் அரசியலில் வழிநடத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது அந்த சபையின் செயற்பாடுகளின் மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

### தமிழ் மக்கள் பேரவை

இத்தகைய ஒரு பின்னணியில் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மீது பல்வேறு குறைகளும் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. பங்காளிக்கட்சித் தலைவர்களுடன் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முக்கியமான விடயங்களிலும்கூட கலந்தாலோசனை நடத்திச் செயற்படுபவர் அல்லர். அவரும் தமிழரசுக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராஜா, மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகிய மூவருமே முக்கியமான முடிவுகளைமேற்கொண்டுசெயற்பட்டு வருகின்றார்கள் என்று தொடர்ச்சியாகக் குறை கூறப்பட்டு வருகின்றது.

இவ்வாறான ஒரு சூழலில்தான் தமிழ் மக்களுக்கான அரசியலில் புதிய தலைமைக்கான நாட்டம் வெளிப்பட்டிருக்கின்றது. முதலில் கூட்டமைப்பின் தலைமை இன்னும் திறன் மிக்கதாகச் செயற்படுவதற்கு உதவியாக, தென்னாபிரிக்காவைப் பின்பற்றி, தேசிய சபை ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டு, அது தொடர்பிலான பேச்சுக்களும் நடைபெற்றிருந்தன. ஆனால், அது வெற்றியளிக்கவில்லை. அதன் பின்பே, தமிழ் மக்கள் பேரவை உருவாகியது.

ஆனால், தமிழ் மக்கள் பேரவையைத் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கான மாற்று அரசியல் சக்தியாகவே தமிழரசுக் கட்சியினரும் வேறு சிலரும் நோக்கினார்கள். அது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிரானதோர் அரசியல் சக்தியாகப் பரிணமிக்கப் போகின்றது என்ற எண்ணப்பாட்டையும் தோற்றுவித்திருந்தது. தமிழ் மக்கள் பேரவையானது ஓர் அழுத்த சக்தியாகவும், வழிகாட்டல் அமைப்பாகவுமே செயற்படும் என்பதை அந்த பேரவையைச் சார்ந்தவர்கள் வலியுறுத்திக் கூறினர். இருந்தபோதிலும், அரசியலில் பிரவேசிப்பதற்கானதோர் அரசியல் அமைப்பு என்ற ஒரு சிலரின் பார்வையை முழுமையாக மாற்ற முடியவில்லை.

வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவராக அதில் இணைந்திருக்கின்றமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறித் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை உருவாக்கியுள்ள பொன்னம்பலம் கஜேந்திரகுமார், கடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற முடியாமல் போயுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் பேரவையில் இணைந்திருக்கின்றமை இதற்கு முக்கிய காரணங்களாகும். பேரவையில் புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சித்தார்த்தனும் இணைந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### புதிய அரசியல் தலைமை

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அல்லது தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகளை செயற்திறன்மிக்க வகையில் முன்னெடுப்பதற்கு ஒரு புதிய அரசியல் தலைமை தேவை என்ற உணர்வு இப்போது வெளித்தெரியும் வகையில் தோன்றியிருக்கின்றது.

புதிய தலைமையை உருவாக்குவது தொடர்பில் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் பல்வேறு கலந்துரையாடல்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆயினும், இறுதி முடிவு ஒன்று இன்னும் எட்டப்படவில்லை. புதிய தலைமைக்குத் தலைவராக முதலமைச்சர் விக்னேஸ்வரனைக் கொண்டு வரவேண்டும் என்பதில் அந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்களுக்கு நாட்டம் இருப்பதாகத் தெரிகின்றது. ஆயினும், அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அவர் தயாராக இல்லை என்ற தகவலும் அண்மையில் வெளிப்பட்டிருக்கின்றது.

இந்த நிலைமையில் புதிய அமைப்பு ஒரு குழுவாக - ஓர் அமைப்பாக - மட்டுமே செயற்படும் என்ற தீர்மானத்தில் ஆலோசனைகளும் கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன எனத் தெரிகின்றது. தலைவர் என்று ஒருவர் இருக்கமாட்டார் என்றும், குழுவாகவே அந்த அமைப்பு செயற்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டு, அதற்கான யாப்பு வரைவு உள்ளிட்ட ஆரம்பக்கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன எனத் தகவல்கள் கசிந்திருக்கின்றன.

இந்த அமைப்பு உருவாக்கப்படுவது குறித்து ஊடகங்களுக்குத் தகவல்கள் வெளியிடுவதில்லை என்பதில் இறுக்கமான முடிவெடுத்து சம்பந்தப்பட்டவர்கள் செயற்பட்டு வருகின்றார்கள்.

புதிய அரசியல் தலைமை உருவாக வேண்டும் என்பதில் பலருக்கும் ஆவலும் ஆர்வமும் இருந்த போதிலும், அதற்குத் தலைமை தாங்குபவர் யார் என்பதில் முடிவெடுக்க முடியாத ஒரு சிலரின் நிலைமையே காணப்படுகின்றது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் இருந்து பிரிந்து செல்பவர்களை மக்கள் ஆதரிக்கமாட்டார்கள் என்பது பொதுவானதோர் அரசியல் நம்பிக்கையாகும். கூட்டமைப்பில் இருந்து விலக்கப்பட்ட அல்லது பிரிந்து சென்ற பொன்னம்பலம் கஜேந்திரகுமார் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்ற அரசியல் கட்சியை உருவாக்கிச் செயற்பட்டு வருகின்றார். ஆயினும், கடந்த பொதுத் தேர்தலில் அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒருவர்கூட வெற்றிபெறவில்லை.

இது கூட்டமைப்புத் தலைமையின் செயற்பாடுகளிலும், அதன் போக்கிலும் அதிருப்தியடைந்துள்ளவர்களுக்கு ஓர் எச்சரிக்கை மணியாக ஒலித்துக் கொண்டிருக்கின்றது. கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செல்பவர்கள் மக்களுடைய ஆதரவை இழந்துவிடுவார்கள் என்பதே பலரினதும் பொதுவான கருத்து.

இதனால்தான் வடமாகாண சபைத் தேர்தலில் அமோகமாக வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற முதலமைச்சர் விக்னேஸ்வரனை ஜனவசிய ரீதியில் தலைவராக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆயினும், அவர் அதற்குத் தயாராக அல்லர்.

எனவே, தலைவராக ஒருவர் இல்லாமல் புதிய அரசியல் தலைமை ஒன்று எவ்வாறு உருவாகப் போகின்றது என்பது இப்போதைக்கு அரசியல் ரீதியாக சுவாரஸ்யமான விடயமாகவே காணப்படுகின்றது.

எது எப்படியாயினும், உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை எதிர்கொண்டுள்ள இப்போதைய அரசியல் சூழலில் தமிழ் மக்களுக்கான செயற்றிறன் மிக்கதோர் அரசியல் தலைமை அவசியம் - அதுவும் அவசரமாக அவசியம் என்ற உணர்வு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலுவான அரசியல் வழிநடத்தலின்றி காணிக்காகவும், காணாமல் ஆக்கப்பட்டோருக்காகவும் ஆறு மாதங்களுக்கு மேலாகத் தொடர்ந்து போராடி வருகின்ற மக்கள் மத்தியிலும் ஏனையோர் மத்தியிலும் வலுவாகத் தென்படுகின்றமையைக் காண முடிகின்றது.

தேர்தலில் அமோகமாக வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற முதலமைச்சர் விக்னேஸ்வரனை, ஜனவசிய ரீதியில் தலைவராக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆயினும், அவர் அதற்குத் தயாராக இருக்கவில்லை.

எனவே, தலைவராக ஒருவர் இல்லாமல் புதிய அரசியல் தலைமை ஒன்று எவ்வாறு உருவாகப்போகின்றது என்பது இப்போதைக்கு அரசியல் ரீதியாக சுவாரஸ்யமான விடயமாகவே காணப்படுகின்றது.

எது எப்படியாயினும், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை எதிர்கொண்டுள்ள இப்போதைய அரசியல் சூழலில் தமிழ் மக்களுக்கான செயற்திறன் மிக்கதோர் அரசியல் தலைமை அவசியம் - அதுவும் அவசரமாக அவசியம் - என்ற உணர்வு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலுவான அரசியல் வழிநடத்தலின்றி காணிக்காகவும், காணாமல் ஆக்கப்பட்டோருக்காகவும் ஆறு மாதங்களுக்கு மேலாகத் தொடர்ந்து போராடி வருகின்ற மக்கள் மத்தியிலும் ஏனையோர் மத்தியிலும் வலுவாகத்தென்படுவதைக் காணமுடிகின்றது. ★

# கிளி.மாவட்டத்தில் வேலை வாய்ப்பின்மை: அதிகளவான இளைஞர், யுவதிகள் பாதிப்பு

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் வேலைவாய்ப்பின்மையால் பெருமளவான இளைஞர், யுவதிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வட்டக்கச்சி பிரதேசத்தில் விளையாட்டுக்கழக இளைஞர்களை சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



இன்றைய இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பின்றி மிகவும் விரக்தியான மனநிலையில் காணப்படுகின்றனர். அவர்களுடன் உரையாடும் போது விரக்தியான மனநிலை வெளிப்படுகின்றமையை அவதானிக்க முடிகிறது. தொழில் வாய்ப்பின்மை எதிர்காலத்தை பாதிக்கப்போகின்றது என்ற பெரும் ஏக்கம் அவர்களை மனதளவில் வதைக்கின்றது.

இளம் சமூகத்தின் இந்த மனநிலை மிகவும் மோசமானது. இது நாட்டுக்கும் சமூகத்துக்கும் ஆரோக்கியமான ஒன்றல்ல. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் இளம் சமூகத்தின் பங்களிப்பு முக்கியமானது. ஆனால், எங்களுடைய பிரதேசங்களில் இளம் சமூகத்தினர் தொழில் வாய்ப்பின்றி இருப்பது துரதிஷ்டவசமானது.

கிளிநொச்சியில் அமையப் பெற்றுள்ள ஆடைத் தொழிற்சாலையில் சுமார் 5 ஆயிரம் வரையிலான யுவதிகள் பணியாற்றுகின்றனர். இதுபோன்ற பல தொழிற்சாலைகள் கிளிநொச்சிக்குக் கொண்டுவரப்பட வேண்டும். அப்போதுதான் இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள்கிடைக்கும். அதற்கு அதிகாரத்தில் உள்ள அரசியல் தரப்புக்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் .

இளம் சமூகத்தில் தொழில் வாய்ப்பின்மையால் ஏற்படுகின்ற விரக்தியான மனநிலை பல்வேறு சமூகச் சீரழிவுகளையும், சமூகவிரோத செயல்களையும் ஊக்குவிப்பதாகவே அமையும். எனவே, அவற்றைக் கருத்தில் எடுத்து செயற்பட வேண்டும். - என்றார். ○(ச)

## கட்சியை நிர்வகிக்க புதிய பதவிகள்:

# பன்னீர்செல்வம் – எடப்பாடிக்கு பொதுச் செயலாளர் அதிகாரம்

அ.தி.முகாவை நிர்வகிக்க புதிய பதவிகள் ஏற்படுத்தப்படும் என்று கட்சியின் பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

புதிய பதவிகளை ஏற்படுத்துவது தொடர்பாக, இரண்டு முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அ.தி.மு.க.பொதுக்குழு, செயற்குழுக் கூட்டம் சென்னையை அடுத்த வானகரத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:



மறைந்த ஜெயலலிதாவின் எண்ணப்படி, அ.தி.முகவை வழிநடத்த ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் ஆகிய பொறுப்புகளை உருவாக்கப் பொதுக்குழு தீர்மானிக்கின்றது.பொதுக்குழு உறுப்பினர்களால், அமைப்புத் தேர்தல் மூலம் ஒருங்கிணைப்பாளரும், இணை ஒருங்கிணைப்பாளரும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

அமைப்புத் தேர்தல் நடைபெறும் வரை, ஜெயலலிதாவின் நம்பிக்கையைப் பெற்று பல ஆண்டுகள் பணியாற்றி வந்திருக்கும் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், ஒருங்கிணைப்பாளராகவும், இணைஒருங்கிணைப்பாளராக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமியும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கு பொதுக் குழு ஒப்புதல் அளிக்கின்றது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளருக்கு கட்சியின் சட்ட விதிகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அனைத்தையும், ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் முழுமையாகப் பெற்று கட்சியை வழிநடத்துவர்.

இரண்டு துணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில், முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, ஆர்.வைத்திலிங்கம் ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர்.

தேர்தல் ஆணையத்துக்கும், அரசுக்கும், நீதிமன்றங்களுக்கும், வங்கிக் கணக்குகள் உள்ளிட்ட அனைத்துவரவு-செலவுகளுக்கும், அ.தி.மு.க. சார்பில் வழங்கப்பட வேண்டிய படிவம் ஏ, பி உள்ளிட்ட அனைத்து வகை ஆவணங்களிலும், கட்சி தொடர்புடைய அனைத்து அறிவிப்புகளிலும், நியமனங்களிலும், ஒழுங்கு நடவடிக்கைகளிலும் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் இணைந்து கையெழுத்திட்டு அளிக்க வேண்டும் என பொதுக் குழு தீர்மானிக்கிறது.

## காந்தி ஜெயந்தியில் களமிறங்கும் கமல்!

நடிகர் கமலஹாசன் விரைவில் தனது அரசியல் கட்சியை ஆரம்பித்து, வர இருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் தனது நற்பணி இயக்கத்தைச் சேர்ந்தவர்களை களமிறக்கப் போகிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



சமீபநாள்களாக தமிழக அரசை சரமாரியாக எதிர்த்துப்பேட்டிகளும், டுவிட்டுகளும் கொடுத்து வரும் கமலஹாசன் ஒரு கட்டத்தில் பல அமைச்சர்களின்கண்டனத்துக்கு உள்ளானார். தமிழக அரசு ஊழல் அரசு என்றும், ஒவ்வொரு துறை தொடர்பான ஊழலை அமைச்சர்களின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள் என்றும் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார் கமல்.

இத்தகைய பின்னணியில் கமலஹாசன் கடந்த சில மாதங்களாக அரசியல் புள்ளிகளைத் தேடிச் சென்றும், தன் வீட்டுக்கு வரவழைத்தும் அரசியல் தொடர்பான நீண்ட ஆலோசனைகளை நடத்தி வருகிறார். இந்த ஆலோசனைகளின் அடுத்த கட்டமாக தற்போது கட்சிக்குத் தேவையான சட்டதிட்டங்களை உருவாக்கும் பணியில் கமல் ஈடுபட்டிருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனது கட்சி மற்றவர்களின் கட்சியைப் போல சராசரி அரசியல் கட்சியாக இருந்துவிடக் கூடாது எனவும், தனது கட்சி மூலம் மக்கள் அரசியலில் ஈடுபட வேண்டும் என்றும் கமல் கருதுகிறார் எனக் கூறப்படு கின்றது.

வர இருக்கின்ற உள்ளாட்சித் தேர்தலில் சுமார் நாலாயிரம் வேட்பாளர்களை தனது நற்பணி இயக்கம் மூலம் நிறுத்த முடிவு செய்திருக்கும் கமல், அதற்கு முன் கட்சியை தொடங்கும் வேலையில் தீவிரமாக இருக்கின்றார்.

ஒக்ரோபர் 2 ஆம் நாள் காந்தி ஜெயந்தி அன்று அவர் தனது புதிய அரசியல் இயக்கத்தைத் தொடங்கலாம் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரத்தில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

## மோடி - பெலரஸ் அதிபர் சந்தித்து பத்து ஒப்பந்தங்களில் கைச்சாத்து

புதுடில்லி.செப்.14

பிரதமர் மோடி, பெலாரஸ் அதிபர் லுக்காஷேங்கோ சந்திப்பின் போது கல்வி மற்றும் விளையாட்டு உள்ளிட்ட விடயங்களில் ஒத்துழைப்பு அளிப்பது தொடர்பாக 10 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றன.

ஐரோப்பிய நாடான பெலாரஸ் நாட்டு அதிபர் லுக்காஷேங்கோ நேற்று முன்தினம் இரவு டில்லி வந்தார். அவருக்கு ஜனாதிபதி மாளிகையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனையடுத்து நேற்று அவர் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார்.



அப்போது இருநாடுகளுக்கு இடையே பரஸ்பர உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாகவும், கல்வி மற்றும் விளையாட்டு உள்ளிட்டவைகளில் ஒத்துழைப்பு அளிப்பது தொடர்பாகவும் 10 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதுதொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள அறிக்கையில், இருநாட்டு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும், ராணுவ தளபாடங்களை இந்தியாவில் தயாரிப்பதை ஊக்குவிப்பது தொடர்பாகவும் ஆலோசித்தோம் என்று தெரிவித்துள்ளார்.

## ரூ. 100 கோடி மதிப்புள்ள பாம்பு விஷம் பறி முதல்!



3 பேர் கைது

மேற்கு வங்க மாநிலத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பிலான பாம்பு விஷம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு வங்க மாநிலம் பாராசாத் பகுதியில் பாதுகாப்புப் படையினர் நடத்திய சோதனையில் 3 நபர்கள் பாம்பு விஷத்தைச் சட்டவிரோதமாக கொண்டுசென்றமை தெரியவந்தது. இதனையடுத்து அவர்களிடம் இருந்து 3 ஜாடிகளில் இருந்த பாம்பு விஷத்தைப் பறிமுதல் செய்துள்ளனர். அதன் மதிப்பு சர்வதேச சந்தையில் 100 கோடி ரூபாய் எனக் கணிக்கப்பட்டுள்ளது. விசாரணையில், அந்தப் பாம்பு விஷத்தை வெளிநாட்டுக்கு கடத்த முயன்றது தெரியவந்துள்ளது. அவர்கள் மூன்று பேரையும் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மருந்துகள் தயாரிக்கவும், பாலியல் சக்தியை அதிகரிக்கவும் பாம்பு விஷம் பயன்படுத்தப் படுகிறது. எனவே, இந்த விஷத்திற்கு சர்வதேச சந்தையில் அதிக கிராக்கி உள்ளது என வனத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# மியன்மார் கலவரத்தில் 86 இந்துக்கள் கொலை

யாங்கூன்.செப்.14

மியன்மார் கலவரத்தின் போது 86 இந்துக்கள் படுகொலை செய்யப்பட்டனர் எனவும், 200 இந்து குடும்பங்கள் உயிருக்குப் பயந்து காடுகளில் தஞ்சம் அடைந்தன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மியன்மாரில் ராக்கின் மாகாணத்தில் ரோகிங்யா முஸ்லிம்களுக்கும், புத்த மதத்தினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. பின்னர் அது கலவரமாக மாறியது. அதை ஒடுக்க சென்ற மியன்மார் இராணுவத்துக்கும், ரோகிங்யா ஆயுதக் குழுவினருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

அதில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர். வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. இராணுவத்தின் ஒடுக்கு முறைகளால் பாதிக்கப்பட்ட மக்கள், உயிர் பிழைக்க அண்டை நாடான பங்களாதேஷிற்கு சென்று தஞ்சம் அடைந்துள்ளனர். இதுவரை 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் அங்குள்ள அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர்.



200 குடும்பங்கள் வீடுகளை இழந்து காட்டில் தஞ்சம்

கலவரத்தில் ஏராளமான ரோகிங்யா முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். 86 இந்துக்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இத்தகவலை வங்காள தேச அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் கலு சீல் என்பவர் தெரிவித்துள்ளார்.

ராக்கின் மாகாணத்தில் நடந்த கலவரத்தின்போது முஸ்லிம் வீடுகளுடன் இந்துக்களின் வீடுகளும் தீ வைத்து எரிக்கப்பட்டது. இந்துக்களின் வீடுகளுக்கு மியன்மார் இராணுவம் தீ வைத்தது. எனவே 200 இந்து குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வீடுகளை இழந்து, அருகில் உள்ள காட்டுப்பகுதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

## 9 ஆவது முறையாக தாத்தா ஆன ட்ரம்ப்



நியூயோர்க்.செப்.14

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் மகன் எரிக் ட்ரம்புக்கு நேற்று முன்தினம் அழகான ஆண் குழந்தை பிறந்துள்ளது. அக்குழந்தைக்கு 'எரிக் ல்யூக் ட்ரம்ப்' என்று பெயரிட்டுள்ளனர்.

அமெரிக்க அதிபராக உள்ள ரொனால்ட் ட்ரம்ப்பின் மகனான எரிக் ட்ரம்ப் - லாரா தம்பதியினருக்கு மூன்றாவது குழந்தையாக நேற்று முன்தினம் அழகான ஆண் குழந்தை பிறந்துள்ளது. அக்குழந்தையின் புகைப்படத்தை எரிக் ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அக்குழந்தைக்கு எரிக் ல்யூக் ட்ரம்ப் என பெயரிட்டுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார். பேரக்குழந்தை பிறந்ததற்கு மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ள அதிபர் ட்ரம்ப், எரிக் ட்ரம்ப் - லாரா தம்பதியினருக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

## அமெ. பெரிய வலியை சந்திக்கும் நிலை நேரிடும்

அணுகுண்டுச் சோதனை நடத்தியதற்காக ஐ.நா. சபை சில தடைகளை விதித்துள்ள நிலையில், எந்தத் தடையையும் ஏற்கப் போவதில்லை என்றும் அமெரிக்கா பெரிய வலியை சந்திக்க நேரிடும் எனவும் வடகொரியா தெரிவித்துள்ளது.

உலக நாடுகளின் எதிர்ப்புகளையும், பொருளாதாரத் தடைகளையும் பொருட்படுத்தாத வடகொரியா சமீப காலமாக பலமுறை அணுகுண்டுகளையும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் பல ஏவுகணைகளையும் பரிசோதித்துள்ளது.

இந்தச் சோதனைகள் அமெரிக்காவை மீண்டும் ஆத்திரப்படுத்தியுள்ளன. இதன் ஒரு பகுதியாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா ஒரு வரைவுத் தீர்மானத்தைத் தாக்கல் செய்தது.

அதில், வடகொரியாவின் நிலக்கரி, லெட் (கனிமப்பொருள்) மற்றும் கடல் உணவுகளை ஏற்றுமதி செய்வதற்கு தடை விதிக்கும் வகையில் திருத்தங்களுடன் கூடிய தீர்மானத்தை அமெரிக்கா தாக்கல் செய்தது.



வடகொரியா பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை

அமெரிக்காவின் இந்த தீர்மானம் சீனா மற்றும் ரஷ்யா ஆதரவுடன் ஒருமனதாக பாதுகாப்பு சபையில் நிறைவேறியது. ஏற்கனவே, பலமுறை வடகொரியாவுக்கு எதிராக பல தீர்மானங்களை ஐ.நா. பாதுகாப்பு சபை நிறைவேற்றியது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஐ.நாவின் தடைகளுக்கு பதிலளித்துள்ள வடகொரிய தூதர் ஹான் டே சாங், சமீபத்தில் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் சட்ட விரோதமானது. இதற்கு கடுமையான கண்டனங்களை தெரிவித்துக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பெற்றோலியப் பொருள்களுக்கு தடை மற்றும் கிம் ஜாங் உன் சொத்துக்கள் முடக்கம் ஆகிய அம்சங்கள் இடம் பெற்ற அமெரிக்காவின் தீர்மானம் நிறைவேறினால் அதற்காக அமெரிக்கா பெரும் வலியை சந்திக்க நேரிடும் என வடகொரியா பாதுகாப்பு அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## சல்பட்ரா எரிமலைக்குள் சிக்கி ஒரே குடும்பத்தில் மூவர் சாவு!

வெடித்துக் கொண்டிருந்த எரிமலைக்குள் சிக்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இத்தாலியில் மியோலோ நகரைச் சேர்ந்தவர் மாசி மிலியானோ கேரீர். இவரது மனைவி திஷியானா ஷாரா மெல்லா . இவர்களுக்கு 11 வயது மற்றும் 7 வயதில் 2 மகன்கள் இருந்தனர். இந்த நிலையில் இவர்கள் மேற்கு நேபிள்ஸ் பகுதியில் பொசு போலியில் உள்ள சல்பட்ரா என்ற எரிமலை பகுதிக்கு நேற்று முன்தினம் சுற்றுலா சென்றனர். அப்போது அந்த எரிமலை வெடிக்கும் தருவாயில் இருந்தது.

எரிமலை வாயில் இருந்து புகைகிளம்பிக்கொண்டிருந்தது. அப்போது தம்பதியினரின் 11 வயது மகன் எரிமலையை அருகில் சென்று பார்க்க மிகவும் ஆசைப்பட்டான். அதை அவனது பெற்றோர் தடுத்தனர்.

இருந்தும் எதிர்பாராத நிலையில் திடீரென ஓடிச் சென்ற அவன் எரிமலை வாய் அருகே இருந்த 10 அடி பள்ளத்தில் தவறி விழுந்தான். அதை பார்த்த பெற்றோர் தனது மகனை காப்பாற்ற ஓடிச் சென்றனர்.

அப்போது திடீரென எரிமலை வெடித்து சிதறியது. அதில் சிக்கி 7 வயதுச் சிறுவனும், அவனது பெற்றோர் மாசி மிலியானோ- திசியானா ஆகிய மூவரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

# பாடசாலை கிரிக்கெட் வியூகத்தில் மஹேல, சிதத் வெத்தமுனி, திலின



இலங்கை கிரிக்கெட் அணி அண்மைக் காலமாக சந்தித்து வருகின்ற தொடர் தோல்விகளுக்கு பாடசாலை மட்ட கிரிக்கெட்டில் காணப் படுகின்ற குறைபாடுகளே காரணம் என முன்னாள் வீரர்கள் பலர் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இலங்கை அணி அண்மைக் காலமாகச் சந்தித்து வருகின்ற தோல்விகளுக்கு பாடசாலை கிரிக்கெட்டும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும், பாடசாலை மட்டத்தில் விளையாடுகின்ற வீரர்கள் பொருத்தமான முறையில் திறமைகளை அடிப்படையாகக் கொண்டு அடையாளம் காணப்படாமை போன்ற காரணிகள் கிரிக்கெட் விளையாட்டு இவ்வாறு பின்னடைவை சந்திக்க காரணியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில், இலங்கை கிரிக்கெட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கிலும், பின்டைவை எதிர்நோக்கியுள்ள பாடசாலை கிரிக்கெட்டை முன்னேற்றுவதற்காக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசமின் ஆலோசனைக் கமைய முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களைக் கொண்ட விசேட குழுவொன்று கடந்த சில தினங்களுக்கு முன் நியமிக்கப்பட்டது.

இதனையடுத்து பாடசாலை கிரிக்கெட் சங்கம் மற்றும் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவினருடனான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் கல்வி அமைச்சரின் தலைமையில் கொழும்பில் இடம்பெற்றது. இதன்போது இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களான சிதத் வெத்தமுனி, மஹேல ஜயவர்தன, திலின கண்டம்பி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பின்னடைவைச் சந்தித்துள்ளஇலங்கைகிரிக்கெட்டை முன்னேற்றமடையச் செய்யும் நோக்கில், எந்தவொரு நபருக்கும் பக்கச்சார்பின்றி பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய அனைத்து தீர்மானங்களையும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் இதன்போது தெரிவித்தார். அத்துடன், பாடசாலை கிரிக்கெட்டின் முன்னேற்றத்துக்காகவும் இதன்போது பல்வேறு யோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

நாட்டிலுள்ள சகல வசதிகளையும் கொண்ட கிரிக்கெட் மைதானங்களில் மாணவர்களுக்கு பயிற்சிகளைப் பெறுவதற்கான வாய்ப்பை இலவசமாகப் பெற்றுக் கொடுத்தல்.பாடசாலை கிரிக்கெட் வீரர்கள் பயன் படுத்துகின்ற விலை உயர்ந்த விளையாட்டு உபகரணங்களுக்கு வரிச்சலுகைகளைப் பெற்றுக்கொடுத்தல். கிரிக்கெட் விளையாடாமல் உள்ள பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களை உள்ளடக்கிய ஒன்றிணைந்த அணிகளை ஒவ்வொரு கல்வி வலயங்களிலும் உருவாக்க நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன. இதன்படி,இலங்கைகிரிக்கெட் அணிக்குத் தேவையான திறமையான வீரர்களை பாடசாலை மட்டத்திலிருந்து உருவாக்கும் நோக்கில் குறித்த வேலைத்திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்தவும் இதன்மூலம் எதிர்பார்க்கப் பட்டுள்ளது.

அதன்படி முன்னாள் வீரர்களின் முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ள விசேட ஆலோசனைக் குழுவொன்று இதன்போது கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டது. இக் குழுவில் சிதத் வெத்தமுனி, ரொஜர் விஜேசூரிய, மஹேல ஜயவர்தன, ஜயந்த செனவிரத்ன, கால்டன் பேர்னார்ட் உள்ளிட்ட முன்னாள் வீரர்களுடன், பாடசாலை கிரிக்கெட் சங்க உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர்.

## 2006 – 2007 உலகக் கோப்பை வரை இந்திய கிரிக்கெட்டின் மோசமான காலம்

சச்சின் டெண்டுல்கர் தெரிவிப்பு



2006 முதல் 2007 உலகக் கோப்பை வரையில் இந்திய கிரிக்கெட்டுக்கு மோசமான காலகட்டம் என்று முன்னாள் இந்திய கப்டனான சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

2007 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றது. அந்தப் போட்டியில் ராகுல் திராவிட் தலைமையில் பங்கேற்ற இந்திய அணி, முதல் சுற்றோடு வெளியேறியது. அது, உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் இந்திய அணியின் மோசமான செயற்பாடாக அமைந்தது.

இந்த நிலையில், அது தொடர்பாக சச்சின் மேலும் கூறியவை வருமாறு:- 2006 முதல்2007 உலகக்கோப்பை வரையில் இந்திய கிரிக்கெட்டுக்கு மோசமான கால கட்டம்.

2007 இல் நடைபெற்ற உலகக் கோப்பை போட்டியில் சூப்பர்-8 சுற்றுக்கு நாங்கள்தகுதி பெறவில்லை. எனினும், பின்னர் அதிலிருந்து மீண்ட இந்திய அணி புதிய சிந்தனை களோடு, புதிய வழியில் பயணிக்க ஆரம்பித்தது. ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டன. ஓர் அணியாக இணைந்து சாதிக்க வேண்டும் என நாங்கள் திட்டமிட்டோம். அதற்கேற்ப அர்ப்பணிப்பு உணர்வோடு விளையாடினோம். அதன் காரணமாக வெற்றி எங்கள் வசமானது.

இந்திய அணியில் மாற்றங்கள் நிகழ்ந்தபோது, அது சரியா, தவறா என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால், அதற்கான பலன் ஒரே இரவில் கிடைத்து விடவில்லை. வெற்றிக்காக நாங்கள் காத்திருந்தோம். அற்புதமான உலகக் கோப்பையை நான் கையில் ஏந்தி வலம் வருவதற்கு 22 ஆண்டுகள் ஆனது என்றார்.

1989இல் இந்திய அணிக்காக ஆட ஆரம்பித்தார் சச்சின் டெண்டுல்கர். ஆனால் 2011இல்தான் அவருடைய உலகக் கோப்பை கனவு நனவானது என்பது குறிப்பிடத்தக்கது.

## முரளியின் பெயர் நீக்கம்



கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்கு சூட்டப்பட்டிருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழல் ஜாம்பவான் முத்தையா முரளிதரனின் பெயர் தற்போது அகற்றப்பட்டுள்ளது என முரளிதரனின் தந்தை தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக கண்டி மல்வத்து மகாநாயக்க தேரிடம் முரளிதரனின் தந்தை சின்னையா முத்தையா கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

நேற்று முன்தினம் மல்வத்து மகாநாயக்க தேரரை சந்தித்த முத்தையா இதுகுறித்து விளக்கமளித்துள்ளார்.

இந்நிலையில்இது தொடர்பாகஉடனடியாக விளையாட்டுத்துறை அமைச்சருக்கு தெரியப் படுத் துவதாக தேரர் உறுதியளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ரி-20போட்டி பாபர் அசாமின் அதிரடியுடன் பதினொருவர் அணியை வீழ்த்திய பாக்.

நடைபெற்று முடிந்திருக்கும் உலக பதினொருவர் அணி மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான சுதந்திரக் கிண்ணத் தொடரின் (Independenc e Cup) முதலாவது ரி-20 போட்டியில் 20 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றுள்ளது.

தீவிரவாதத் தாக்குதல் நடைபெற்ற பாகிஸ்தானில் சர்வதேச கிரிக்கெட்டை மீண்டும் கொண்டுவரும் நோக்கோடு, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினால் (PCB) பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அந்த முயற்சிகளில் ஒன்றாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கும் உலக பதினொருவர் அணிக்கும் இடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ரி-20 தொடரின் முதல் போட்டி பாகிஸ்தானின் லாஹூர் நகரின் கடாபி மைதானத்தில் பெருந்திரளான ரசிகர்கள் மத்தியில் ஆரம்பமாகியது.

இந்த விறுவிறுப்பான ஆட்டத்தின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற உலக பதினொருவர் அணியின் தலைவர் பொப் டு ப்ளெசிஸ் முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினைப் பாகிஸ்தானிற்கு வழங்கியிருந்தார்.

இதற்கு அமைவாக பக்கார் சமான் மற்றும் அஹ்மத் ஷேசாத் ஆகியோருடன் தமது துடுப்பாட்டத்தினைதொடங்க மைதானம் விரைந்த பாகிஸ்தான் அணி நல்லதோர் ஆரம்பத்தினைத் தரவில்லை.



ஆரம்ப வீரர்களில் ஒருவரான பக்கார் சமான் வெறும் 8 ஓட்டங்களுடன் தென்னாபிரிக்க வீரர் மோர்னே மொர்க்கலின் பந்து வீச்சில் ஹசிம் அம்லாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து புதிதாக களம் நுழைந்த பாபர் அசாம் களத்தில் நின்ற அஹ்மத் ஷேசாத்துடன் இணைந்து அதிரடியான ஆட்டத்தை வெளிக்காட்டியிருந்தார். பாகிஸ்தான் அணியின் இரண்டாம் விக்கெட்டிற்காக 122 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டது. இதனால் வலுவடைந்த பாகிஸ் தானின் இரண்டாம் விக்கெட்டாக அஹமட் ஷேசாத் 39 ஓட்டங்களுடன் ஓய்வறை திரும்பினார்.

தொடர்ந்து தனது இரண்டாவது ரி-20 அரைச் சதத்தினைத் தாண்டி சிறப்பாக செயற்பட்டிருந்த பாபர் அசாமின் விக்கெட்டும் பறி போனது. ஆட்டமிழக்கும் போது அசாம் 52 பந்துகளில் 10 பௌண்ரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 86 ஓட்டங்களினை விளாசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அசாமிற்கு பிறகு வந்த பாகிஸ்தானின் துடுப்பாட்ட வீரர்கள் பெரிதாக சோபிக்காது விடினும், அனுபவமிக்க சொஹைப் மலிக்கின் விரைவான துடுப்பாட்டத்துடன் 20 ஓவர்கள் நிறைவில் பாகிஸ்தான் 5 விக்கெட்டுக்களை இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டத்தில், சொஹைப் மலிக் வெறும் 20 பந்துகளிற்கு 4 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 38 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

உலக பதினொருவர் அணியின் பந்து வீச்சில், இலங்கையின் சகலதுறை ஆட்டக்காரர் திசர பெரேரா 2 விக்கெட்டுக்களையும், அவுஸ்திரேலிய அணியின் பென் கட்டிங் மற்றும் தென்னாபிரிக்க அணியின் மோர்னே மொர்க்கல் மற்றும் இம்ரான் தாஹீர் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதமும் கைப்பற்றியிருந்தனர்.

இதனையடுத்து வெற்றி யிலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 198 ஓட்டங்களை பெறுவதற்கு பதிலுக்கு ஆடிய, உலக பதினொருவர் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களை மாத்திரம் பெற்று போட்டியில் தோல்வியடைந்தது.

உலக பதினொருவர் அணியில் அதிகபட்சமாக டர்ரேன் சமி (ஆட்டமிழக்காமல்) மற்றும் பாப் டு ப்ளேசிஸ் ஆகியோர் தலா 29 ஓட்டங்கள் வீதம் பெற்றிருந்தனர். இன்னும் பாகிஸ்தானிற்கு நெருக்கடி தருவார் என எதிர்பார்க்கப்பட்டிருந்த தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர வீரர் ஹசிம் அம்லாவும் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சில் சொஹைல் கான், ரும்மான் ரயீஸ் மற்றும் சதாப் கான் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்கள் வீதம் வீழ்த்தி போட்டியின் வெற்றியாளர்களாக மாறியிருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் சுதந்திர கிண்ணத்தின் மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ளது. போட்டியின் ஆட்ட நாயகனாக தனது சிறப்பான அரைச் சதத்

# போட்டித் தடைக்கு உள்ளாகியுள்ள ரியல் மட்ரிட்டின் மூன்று தலைவர்கள்

புதிய பருவகாலத்திற்கான அனைத்து உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளும் ஆரம்பமாகியுள்ள நிலையில் ஸ்பெயினின் ரியல் மட்ரிட் கழகத்தின் முதல் மூன்று தலைவர்களும் கடந்த ஒருமாத காலத்திற்குள் சிவப்பு அட்டை காண்பிக்கப் பட்டு வெளியேற்றப்பட்டது மட்டுமன்றி, பல போட்டிகளில் விளையாடத் தடையும் விதிக்கப்பட்டுள்ளன.

இப்பருவகாலத்திற்கான சுற்றுப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்திற்குள் ரியல் மட்ரிட் அணியின் முக்கிய வீரர்கள் பலர் போட்டி விதிமுறைகளை மீறி விளையாடிய குற்றத்திற்காக போட்டியின் இடைநடுவே சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்நிகழ்வுகளால் அவ்வணியின் ரசிகர்கள் அதிருப்தியிலுள்ளனர்.

கடந்த ஒருமாத காலத்திற்குள் ரியல் மட்ரிட் கழகத்தின் முதல் மூன்று தலைவர்களுமே இவ்வாறு சிவப்பு அட்டை காட்டப்பட்டவர்களாவர். பார்சிலோனா கழகத்துடன் நடைபெற்ற ஸ்பெயினின் சூப்பர்




கிண்ணத்திற்கான இறுதியாட்டத்தின் முதற்கட்ட போட்டியில், ரியல் மட்ரிட் கழகத்தின் தற்போதைய மூன்றாவது தலைவரான கிறிஸ்டியானோ ரோனால்டோ 80ஆவது நிமிடத்தில் தான் பெற்ற கோலின் போது தனது மேலாடையை கழற்றியதற்காக ஒரு மஞ்சள் அட்டையும், போட்டியின் 82ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் பெனால்டி எல்லையில் டைவ் பண்ணிய குற்றத்திற்கு இரண்டாவது மஞ்சள் அட்டையும் காண்பிக்கப்பட்டு பின்னர் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

இரண்டாவது சிவப்பு அட்டையின் போது நடுவரை தள்ளிய குற்றத்தையும் இணைத்து இவருக்கு 5 போட்டிகளில் தடை விதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ரியல் மட்ரிட் கழகம் டிபோர்டிவோ கழகத்துடன் மோதிய தனது முதல் லாலிகா போட்டியில் ரியல் மட்ரிட் கழகத்தின் முதல் தலைவரும், சிறந்த பின்கள வீரருமான ஸர்ஜீயோ ராமோஸிற்கு போட்டியின் 92ஆவது நிமிடத்தில் இரண்டு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். அத்துடன், இவருக்கு ஒரு லாலிகா போட்டித் தடையும் விதிக்கப்பட்டது.

இதில் முக்கிய விடயம் யாதெனில் இவர்கள் இருவருடைய சிவப்பு அட்டை சம்பந்தமாகவும் ரியல் மட்ரிட் கழகம் மேன்முறையீடு செய்த போதும், தண்டனைகள் எந்த விதத்திலும் குறைக்கப்படவில்லை.

அத்துடன், நேற்றுமுன்தினம் தினம் மார்சலோவிற்கு நான்கு போட்டிகள் தடை விதிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

# பணிப் புறக்கணிப்பில் மின்சார சபை ஊழியர்கள்



தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை உடன் நிறைவேற்றக் கோரி இலங்கை மின்சார சபை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நாடாளவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பணிப்புறக்கணிப்பு, வடமாகாண பிராந்திய முகாமையாளர் அலுவலகத்திலும் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கற்பூரம் கொளுத்தி, தேங்காய் உடைத்து, மின்சார சபை ஊழியர்கள் தமது எதிர்ப்பையும், கண்டனத்தையும் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், சம்பள முரண்பாட்டைச் சரி செய்யத் தவறியமை, 2015ஆம் வருட முறைகேடான சம்பளக் கொள்கை மற்றும் ஊழல், மோசடிகளுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், தங்களுக்கு இரண்டு நாள்களுக்குள் உரிய தீர்வு கிடைக்காவின் மீண்டும் தொடர் போராட்டத்தைத் தாங்கள் முன்னெடுக்கவுள்ளனர் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்., கிளிநொச்சியில் தற்கொலைகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலே, தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்து, வருவதாக வடமாகாண சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாய்வின் முடிவுகளின்படி யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில், 2009ஆம்ஆண்டில், 124பேரும், 2010ஆம் ஆண்டு 137பேரும், 2011ஆம் ஆண்டு 141பேரும், 2012ஆம் ஆண்டு 153 பேரும் 2013ஆம் ஆண்டு 158பேரும், 2015ஆம் ஆண்டு 139பேரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இத்தகவல்களின்படி தற்கொலை செய்து கொள்வோரில், 40-55 வயதிற்கு உட்பட்ட பெண்களே அதிகளவில் உள்ளனர் எனச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவர்களில் அதிகமானோர் தனியாக வாழ முடியாத, சமூகக் காரணங்களினாலே தற்கொலை செய்து கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தத்தினால் கணவன் மற்றும் உறவினர்களை இழந்தமை, உடைமைகள் அனைத்தையும் இழந்தமை போன்ற விடயங்களே தற்கொலைசெய்யும் அளவிற்குத் தாக்கம் செலுத்தின என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்களாகிய காரணங்களினாலும், அதிகளவானோர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என மேலும் தெரிய வருகின்றது.

எனவே மக்களின் மனநிலை மட்டத்தை அதிகரிப்பதற்கு, ஆலோசனைவழங்கும்வேலைத் திட்டம் ஒன்றை அமைப்பது அவசியம் என கூறப்பட்டுள்ளது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன எனவும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சிரேஷ்ட நிலை அதிகாரிகள் பிரசல்ஸில் இருந்து வருகை தந்து கடந்த 10 நாட்களாக தகவல் அறியும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இலங்கை ஏற்றுக்கொண்டுள்ள 27 சர்வதேச சாசனங்களின் நடைமுறை அடிப்படைகளை வைத்துக் கொண்டு இந்த அதிகாரிகள் இலங்கையில் அமைச்சர்கள், சமூகப் பணியாளர்கள், தொழிற்சங்கங்கள், சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்தனர். யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் சென்ற அவர்கள், வடக்கு முதலமைச்சர் சீ.வி விக்னேஸ்வரனையும் சந்தித்தனர். அத்துடன் அவர்கள் மனித உரிமைகள் காப்பு பிரதிநிதிகளையும் சந்தித்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இந்த குழுவினர் நடத்திய சந்திப்பின் போது இலங்கையில் எந்தளவான நிலைவர மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை ஆராய்ந்தனர் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது.

மனித உரிமைகள் விடயத்தில் உண்மையான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் முக்கிய விடயங்களில் இன்னும் தீர்வுகள் எட்டப்படவில்லை.

சித்தரவதைகள் நிறுத்தப்பட வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாக சர்வதேச தரத்தை கொண்ட சட்டம் இயற்றப்பட வேண்டும். இதனை வலியுறுத்தியுள்ள ஐரோப்பிய ஒன்றியம், ஒருவரை கைது செய்யும் போது, சட்டத்தரணிகள் பிரசன்னமாகி இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகிறது. மக்களின் காணிகள் அதன் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு நம்பிக்கை கட்டி எழுப்பப்பட வேண்டும். பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளையும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா சுதந்திரக் கட்சியில் தெரிவு செய் யப்பட்ட 96 எம்.பிக்களில் 52 பேர் கூட்டு எதிரணி என்ற பெயரில் மஹிந்த ராஜபக்ஷகளுக்கு விசுவாசமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

எஞ்சிய 44 சுதந்திரக் கட்சியினரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சு.கவில் செயற்பட்டு வருகின்றனர். ஆனால் இவர்கள் அனைவரும் ஒன்றில் அமைச்சர்கள், இல்லையேல் பிரதி அல்லது இராஜாங்க அமைச்சர்கள்.

தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின் படி – கடைசியாகச் செய்யப்பட்ட 19 ஆவது திருத்தப்படி – அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை அதற்கான உச்ச எல்லையைத் தொட்டுவிட்டது.

இனி யாருக்கேனும் அமைச்சுப்பதவி கொடுக்கப்படுவதாயின், இப்போது பதவியிலிருக்கும் ஒருவரை விலக்கிவிட்டே அந்த இடத்துக்கு இன்னொரு அமைச்சரை நியமிக்க முடியும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மஹிந்த அணியிலிருந்து மைத்திரி தலைமைக்கு விசுவாசமாக மாற விரும்பும் மூத்த தலைகளை மீண்டும் கட்சிக்குள் உரிய இடத்துக்குக் கொண்டு வருவதாயின் – மஹிந்த ராஜபக்ஷ முன்னர் அவர்களுக்கு வழங்கியமை போன்றே – சிரேஷ்ட அமைச்சர் பதவிகளை அவர்களுக்கு வழங்க வேண்டிய கட்டாயம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உண்டு.

அதனால்தான் அந்த இருவரையும் மீண்டும் தம் பக்கம் இழுக்க ஜனாதிபதி விரும்புகின்றாராயினும், அதைச் செயற்படுத்த முடியாது – தம் பக்கம் வரும் அவர்களுக்கு உரிய அமைச்சுக்களை ஒதுக்கிக் கொடுக்க இயலாமல் – அவர் திண்டாடுகின்றார் எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## சு.க.வுக்குள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர். மேல் மாகாண சபை முதல்வர் பதவியிலிருந்து சுனில் ஜயமினி அகற்றப்பட்டுள்ளார்.

தென்மாகாண சபையின் விளையாட்டுத் துறை அமைச்சர் வீரசுமன வீரசிங்க அப்பதவியிலிருந்து தூக்கப்பட்டுள்ளார்.

அடுத்து வரும் நாள்களில் மேலும் பல தலைகள் உருள இருக்கின்றன எனக் கூறப்படுகின்றது. (உ)

## இராணுவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாடு, அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

அதன்போது, ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எமது நாட்டில் பாரம்பரிய வைத்திய முறைகளுக்காக கஞ்சா, அபின் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக பாரம்பரிய வைத்திய முறைகளைக் கையாளும் வைத்தியர்கள் என்னிடம் முறைப்பாடு தெரிவித்தார்கள்.

ஆதலால், இராணுவத்தினரை பயன்படுத்தி கஞ்சா உற்பத்தியை மிகப் பாதுகாப்பான முறையில் மேற்கொள்வது குறித்து ஆராய்ந்து வருகிறோம். இதன் மூலம் உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும் என்பதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய முடியும்.

முதற்கட்டமாக நூறு ஏக்கரில் (40 ஹெக்டரில்) கஞ்சாச் செய்கை இராணுவத்தினர் மூலம் மேற்கொண்டால் வருடத்துக்கு 25 தொன் வரை சாகுபடி செய்ய முடியும். – என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## விரும்பியோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சியில் ஒரு பகுதி எம்.பிக்களே அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் பதவியுடன் மைத்திரிபால சிறிசேன தலைமையின் கீழ் செயற்படுகின்றனர். அரைவாசிக்கும் அதிகமான சு.க.வின் எம்.பிக்கள் மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டு எதிரணிப் பக்கம் உள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பக்கத்திலிருக்கும் பலர் மஹிந்த ராஜபக்ஷ தரப்பிற்குத் தாவக்கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன என அண்மைக் காலமாகச் செய்திகள் வெளியாகி வந்தன. அந்தப் பின்புலத்தில் தமது அணி உறுப்பினர்களை நேற்று முன்தினம் இரவு சந்தித்தார் ஜனாதிபதி மைத்திரிபால.

அந்தச் சமயமே "இருப்போர் இருக்கலாம். விரும்புவோர் விலகலாம்." – என்று ஆணித்தரமாக அவர் கூறினார் என அறிய வந்தது.

அணி தாவப் போகின்றோம் என இனிப் போக்குக் காட்டுவோர், அச்சுறுத்துவோர், அப்படிக் காரியம் காட்டி சாதிக்க முயல்வோர் மற்றும் அதைக் காட்டி உழைக்க முற்படுவோருக்குத் தாம் இடமளிக்கவேமாட்டார் என்பதை ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் மிக உறுதியாக வெளிப்படுத்தினாராம்.

அரசியல் எதிர்காலம் குறித்து ஜனாதிபதி திட்டவட்டமான முடிவுகளை எடுத்துவிட்டார், இனிமேல் நழுவல், வழுவல் போக்குகளுக்கு அவர் இடமளிக்கவே மாட்டார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (உ)

## 20ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம நீதியரசர் பிரசாத் டெப், நீதியரசர்கள் அனில் குணரத்ன, விஜித் மலலகொட ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த விடயத்தை விசாரித்தது.

இந்த விசாரணைகளின் பின்னர் இந்த அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினால் போதுமா அல்லது அதனுடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெற வேண்டுமா என்பது குறித்துத் தனது தீர்ப்பை உயர்நீதிமன்றம் ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் இன்று அனுப்பி வைக்கும்.

சபாநாயகர் அதனை எதிர் வரும் 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அறிவிப்பார். (உ)

## பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக செயற்பட்ட 5 பொது சுகாதார பரிசோதகர்களின் வேதனங்களை நிறுத்தி அவர்களை சேவையிலிருந்து நீக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.ரெலிகொம் முன்றலிலிருந்து நேற்று நண்பகல் 12 மணியளவில் ஆரம்பமாகிய இந்தப் பேரணி யாழ்.பண்ணையிலுள்ள சுகாதார அமைச்சின் அலுவலகம் வரை சென்று அங்கு வடமாகாண சுகாதார அமைச்சரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## நீதிமன்றத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருக்கின்றது.

அமைச்சரவைப் பேச்சாளர் டாக்டர் ராஜித சேனாரத்ன நேற்று செய்தியாளர் மாநாட்டில் அரசின் இந்த நிலைப்பாட்டை வெளியிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த மாநாட்டிலேயே இந்த விடயத்தை அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

லலித் வீரதுங்கவையும், அனுஷ பல்பிட்டவையும் வெலிகடைச் சிறையில் போய் மஹிந்த ராஜபக்ஷ சந்திருக்கின்றார்.

தன்னுடைய உத்தரவுகளை நிறைவேற்றியமைக்காகவே அவர்கள் இருவரும் தண்டிக்கப்பட்டனர் என்ற உண்மையை அவர் அங்கு கூறியுள்ளார்.

அது உண்மையாயின் இந்த வழக்கு விசாரணை 24 நாள்கள் நடைபெற்றபோது அங்கு போய் இதனை அவர் ஒப்புவித்திருக்க வேண்டும்.

இதுவரை ஜனாதிபதிமாருக்கு வழங்கப்பட்டு வந்த சட்ட விலக்களிப்புச் சலுகைகள் பத்தொன்பதாவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் இப்போது நீக்கப்பட்டுவிட்டன.

இந்த அரசமைப்பு திருத்தப்படி இப்போதைய ஜனாதிபதிக்கு மாத்திரம் அல்லர், முன்னர் இருந்த ஜனாதிபதிகளுக்கு எதிராகவும் கூட வழக்குகள் தொடுக்கப்படலாம்.

ஆகவே 'சில்' துணி விநியோகக் குளறுபடிக்கான உத்தரவைத் தாமே விடுத்தார் என மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றமையால் அவருக்கு எதிராக – அதற்காக – வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

அத்தோடு வழக்கின் தீர்ப்பை அவர் மோசமாக விமர்சித்து கூறுகின்றமையால் அவருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் கூடத் தொடுக்கப்படலாம். – என்றார் வைத்தியர் ராஜித சேனாரத்தன. (உ)

## வித்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவை பூர்த்தியானமையை அடுத்து தீர்ப்புக்கான திகதி நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணைகள் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் மற்றும் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பா.ச மகேந்திரன் ஆகிய மூன்று நீதிபதிகள் அடங்கிய 'ட்ரயல் அட் பார்' மன்றில் கடந்த 3 மாதங்களாக நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் 11 ஆவது எதிரியாக இருந்து அரச சாட்சியாக மாறிய உதயசூரியன் சுரேஷ்கரனையும் தீர்ப்பு வழங்கும் தினத்தன்று மன்றிற்குச் சமுகமளிக்குமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 27 ஆம் திகதி வரை ஏனைய சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (உ)

### சைட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து

# யாழ்ப்பாணத்தில் தொடங்கிய வாகனப் பேரணி வவுனியாவில் இருந்து அநுராதபுரம் புறப்பட்டது!










வவுனியா,செப்.14

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக யாழ்ப்பாணத்தில்தொடங்கிய வாகனப் பேரணி, வவுனியாவில்இருந்து அனுராதபுரத்தை நோக்கி நேற்று புதன்கிழமை புறப்பட்டது.

'சைட்டத்துக்கு எதிரான மக்கள் அரண்' அமைப்பின் ஏற்பாட்டில் யாழில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இந்த வாகனப் பேரணி, வவுனியாவை நேற்று புதன் கிழமை சென்றடைந்தது. இந்த நிலையிலேயே அந்தப் பேரணி அனுராதபுரத்தை நோக்கி மீண்டும் சென்றது.

வவுனியா ஏ 9 வீதியில் உள்ள புதிய பஸ் நிலையம் முற்பகல்10 மணிக்கு ஆரம்பித்த இந்த வாகனப் பேரணி, மன்னார் வீதி வழி யாக குருமன்காடு சந்தியை அடைந்தது.

பின்னர் அங்கிருந்து வைரவபுளியங்குளம் ஊடாகச் சென்று வவுனியா மணிக்கூட்டுக் கோபுரச்சந்தியை அடைந்து, மீண்டும் அங்கிருந்து ஏ 9 வீதி வழியாக அனுராதபுரம் நோக்கிச் சென்றது.

'தனியார் மருத்துவக் கல்லூரியான சைட்டத்தை நிறுத்து', 'இலவசக்கல்வியை சிதைக்காதே' போன்ற வாசகங்களுடன் மோட்டார் சைக்கிள்கள், கார்கள், ஓட்டோக்கள் போன்ற வாகனங்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டன.

இதில், வைத்தியர் சங்கம், மருத்துவ பீட மாணவர்கள், ஓட்டோ உரிமையாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதேவேளை, சைட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா வைத்தியசாலை வைத்தியர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-100)

# 'ஜனாதிபதி தந்தை' நூல் வெளியீடு நாளை!






சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த மனிதர் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட அபூர்வமான கதையை, அவருடைய மகளே புத்தகமாக வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் மூத்த மகளான சதுரிகா சிறிசேன எழுதிய 'ஜனாதிபதி தாத்தா' (ஜனாதிபதி தந்தை) நூல் வெளியீட்டு விழா, நாளை கொழும்பு பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

தனது தந்தை பிரதேசத்தின் அரசியல்வாதியாக அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்து, ஜனாதிபதி பதவி வரை கடந்து வந்த பயணத்தில் தான் பெற்ற அனுபவங்களை சதுரிகா இந்த நூலில் பதிவிட்டுள்ளார்.

இந்த நூல் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் ஒரு தந்தை தொடர்பாக மகள் ஒருவரால் எழுதப்பட்ட முதலாவது வாழ்க்கைச் சரிதமாக வரலாற்றில் தடம் பதிக்கிறது.

ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன தனது அரசியல் வாழ்க்கையின் ஆரம்ப காலப்பகுதியிலிருந்தே பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்தவர் ஆவார். ஒருகுடும்பமாகஅவர்கள் அவற்றை எதிர் கொண்ட விதம் குறித்து சாதாரண மக்களுக்கு தெரியாத பல தகவல்கள் இந்த நூலில் எழுதப்பட்டுள்ளன.

சியனேகோரலையில் இருந்து ரஜரடவுக்கு வாழ்க்கையை தேடிச்சென்ற துணிச்சலான விவசாய பரம்பரையின் உண்மை வாழ்க்கைச் செய்தி இந்த நூலின் ஊடாக இலக்கிய உலகுக்கு வழங்கப் பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் போராட்டத்தில் இதுவரை வெளிக் கொண்டுவரப்படாத பல்வேறு உண்மைக் கதைகளை உள்ளடக்கிய இந்த நூலின் சிறப்பம்சம், அரசியல் சாயலில் அல்லாமல் சுவையான ஒரு நாவலின் பாணியில் எழுதப்பட்டுள்ளது.

### கண்ணி வெடியால் பாதிக்கப்பட்டோருக்கு

# வாழ்வாதார உதவிகள் வவுனியாவில் வழங்கல்!




நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக கண்ணி வெடியால் பாதிப்படைந்தவர்களுக்கு 'சேட்' நிறுவனம் பல்வேறு வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகிறது.

இதன் ஒரு கட்டமாக வவுனியாவைச்சேர்ந்த இரண்டு குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலகத்தில் மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்றது.

வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவைச்சேர்ந்த ஆர்.எம்.சந்திரராசா, வவுனியா வடக்குபிரதேசசெயலகத்தைச் சேர்ந்த ஆனந்தராசா பாலசரஸ்வதி ஆகியோருக்கே இந்த உதவிகள் வழங்கப் பட்டன.


(ச)

# பதில் பிரதம நீதியரசராக ஈவா வனசுந்தர



உயர்நீதிமன்ற நீதியரசர் திருமதி ஈவாவனசுந்தர பதில் பிரதம நீதியரசராக நேற்று மாலை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்த நியமனம் இன்று முதல் நடைமுறைக்கு வருகின்றது. ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவும் இந்நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தார்.




# 18 வருடங்களின் பின் முகமாலையில் ஆரோக்கியமாதாவின் திருநாள் விழா



முகமாலை புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா 18 வருடங்களின் பின்னர் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

நாளை மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாட்டுடன் திருப்பலி இடம்பெற்று பின்னர் 17.09.2017 காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலி நடைபெற்று அன்னையின் ஆசிர்வாதம் இடம்பெறவுள்ளது.

முகமாலை கடந்த காலத்தில் கடும் யுத்தம் இடம்பெற்ற பிரதேசமாகவுள்ளது. குறித்த பிரதேசத்தில் அதிகளவு ஆபத்தான வெடிபொருள்கள் காணப்படுகின்றன. அங்கு தற்போது கண்ணி வெடி அகற்றும் நிறுவனங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நெடுங்கேணி – புளியங்குளம் வீதியில் யானைகள் கூட்டம்; மக்கள் அச்சம்!



வவுனியா, செப்.14

நெடுங்கேணி – புளியங்குளம் வீதியில் நான்கு யானைகள் நேற்று மாலை வீதிக்கு வந்து நீண்ட நேரம் அப்பகுதியில் நடமாடியமையால் அவ்வீதிவழியாகப் பயணித்தோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

நேற்று மாலை 4.30 மணிமுதல் மாலை 5.20 வரை அப்பகுதியில் யானைகளின் நடமாட்டம் காணப்பட்டதாக அவ் வீதி வழியாகப் பயணித்தோர் தெரிவித்துள்ளனர். இதனால் அச்சத்துடனேயே பலரும் பயணங்களை மேற்கொண்டனர். தற்போது மாலை வேளைகளில் அப்பகுதியில் அடிக்கடி யானைகள் வந்து செல்கின்றன எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(உ–100)

# காணாமற்போனோர் அலுவலகம் ஜனாதிபதியின் கீழே வரமுடியாது!

## சட்டச் சிக்கலைச் சுட்டிக்காட்டுகின்றார் பாக்கியசோதி



19 ஆவது அரசமைப்புத்திருத்தத்தின் கீழ் காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் அலுவலகத்தை நல்லிணக்க அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்க முடியாது என சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அரசமைப்புக்கு முரணாக இந்த அலுவலகம் அமைக்கப்படுமாயின் எதிர்காலத்தில் அதன் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தி அடைவோர் நீதிமன்றம் சென்று, வழக்குதொடுக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளமையே தமக்கு உள்ள அச்சம் என மாற்றுக்கொள்கைக்கான ஆய்வு நிலைய நிறைவேற்றுப்பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்ட பாக்கியசோதி சரவணமுத்து –

காணாமற் போனோர் தொடர்பான அலுவலகச் சட்டமூலம் ஒரு வருடத்திற்கு முன்னர் கொண்டு வரப்பட்டது. அமைச்சொன்றுக்கு வழங்குவதற்கு ஒரு வருடம் சென்றது. இவ்வாண்டு ஜூலை மாதம் ஜனாதிபதி, நல்லிணக்க அமைச்சர் என்ற வகையில் தனது அமைச்சுக்கு அதனைப் பாரமெடுத்தார். அவ்வாறு பாரப்படுத்தப்பட்ட பின்னர் அதன் நடைமுறைப்படுத்தும் தினம் குறித்து அறிவிக்கப்பட வேண்டும்.

இவ்வாண்டு ஜூலை மாதம் நாம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தோம். அதன் ஊடாக நாம் தெரியப்படுத்தியிருந்தோம். எமக்கு தெரிந்த வகையில் 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் எந்த எந்த அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்க முடியும் என்பது தொடர்பில் அதில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. பாதுகாப்பு, சூழல் மற்றும் மகாவலி போன்ற அமைச்சுக்களையே ஜனாதிபதி வைத்திருக்க முடியும் என அதில் கூறப்பட்டுள்ளது.

நல்லிணக்கம் குறித்து எந்தவொரு கருத்தும் 19 ஆவது திருத்தத்தில் வெளியிடப்படவில்லை. அவ்வாறாயினும் தற்போது இறுதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதியின் கீழ் அவர் அமைச்சர் என்ற வகையில் நல்லிணக்க அமைச்சுக்கே இந்த அலுவலகம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. எனினும் 19 ஆவது திருத்தத்தின் கீழ் ஜனாதிபதிக்கு அந்த அமைச்சைப் பொறுப்பேற்க முடியாது என எமது அறிக்கையில் நாம் தெரியப்படுத்தியுள்ளோம்.

மூன்று அமைச்சுக்களை மாத்திரமே எடுக்க முடியும் எனத் தெளிவாக கூறப்பட்டுள்ளது தானே?

காணாமற் போனோர் அலுவலகத்தை அமைப்பதை நாம் மிகவும் வரவேற்கின்றோம். இந்த அலுவலகத்தை அமைப்பது தொடர்பிலும் மனித உரிமைகள் தொடர்பிலும் பாதுகாப்பு தொடர்பிலும் பாரிய பங்களிப்பை நாம் வழங்கியுள்ளோம். எமது அச்சம் இதுவே.

இவ்வாறு அரசமைப்பிற்கு எதிராக இந்த அலுவலகம் அமைக்கப்படுமாயின் நாளை, நாளை மறுதினம், ஒருவருடத்தில், மூன்று வருடங்களில் அல்லது ஐந்து வருடங்களில் இந்த அலுவலகம் சரியாக செயற்படும் போது அதன் செயற்பாடுகள் தொடர்பில் ஒருவருக்கு விருப்பம் இல்லை ஆயின் அவர்கள் நீதிமன்றம் சென்று, இந்த அலுவலகம் சரியான முறையில் அமைக்கப்பட்டுள்ளதா எனதீர்ப்பொன்றைவழங்குமாறு கோர முடியும்.

இல்லாவிடின் அரசமைப்புக்கு முரணாகவோ எதிராகவோ அமைக்கப்பட்டுள்ளது என நீதிமன்றத்தைக் கேட்க முடியும்.

காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் அலுவலகத்தை அமைப்பது மிகவும் முக்கியமானது. எனினும், அரசமைப்பின் பிரகாரம் அதைச் செயற்படுத்துங்கள் என்றே நாம் கூறுகின்றோம். சரியாகச் செய்யுங்கள். அவ்வாறு செய்யும் பட்சத்தில் எந்தவொரு பிரச்சினையும் வராது.

யாருக்கும் எந்தச் சந்தேகமும் எழாது. எதிர்காலத்தில் இந்தக் காரியாலயம் சரியாகச் செயற்பட முடியும். நல்லிணக்கம் தொடர்பில் எந்தவொரு தடையும், பாதிப்பும், சந்தேகமும் பிரச்சினையும் இல்லாமல் சிறந்த செயற்பாடுகளை இதன் ஊடாக செய்ய முடியும். – எனக் குறிப்பிட்டார்.

# வவுனியா – மூன்றுமுறிப்பில் மூன்று கைக்குண்டுகள் மீட்பு!



வவுனியா, செப்.14

வவுனியா – மூன்று முறிப்பு பகுதியில் வயல் காணியிலிருந்து வெடிக்காத நிலையில் மூன்று கைக்குண்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

அப் பகுதியிலுள்ள வயல் காணியைத் துப்புரவு செய்து கொண்டிருந்தவர்கள் நேற்று முற்பகல் 11.45 மணியளவில் அப்பகுதியில் வெடிக்காத நிலையிலிருந்த 3 கைக்குண்டுகளை அவதானித்துள்ளனர்.

இதையடுத்து பொலிஸாருக்கு இது குறித்துத் தகவல் அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் அப்பகுதியை பார்வையிட்டபோது மேலும் அப்பகுதியில் மோட்டார் குண்டுகள் இருக்கக்கூடும் எனக் கருதினர். இதனையடுத்து, பொலிஸார் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று அப்பகுதியில் மேலும் அகழ்வுப்பணியை மேற்கொள்ளவிருக்கின்றமையுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

(உ–100)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.